முரசொலி

வார இதழ்.

ஆசிரியர் மு. கருணாநிதி. 2 அணா

முரசு 2 | சென்னை | 21—10—55 | வெள்ளி | ஒலி 30

குறளோவியம்

[கருணா]

தெற்குச் சீமை வீரத்தின் விளைநிலம். ஈட்டியின் பாய்ச்சல் கண்டு இமை கொட்டியவன் கோழை—இது தமிழர்களின் போர்க் குரல்.

இருபெரும் நாட்டு வீரர்கள் சந்தித்துப் பேசினார்கள்.

ஒருவன் சொன்னான் பெருமையோடு: "எமது மன்னர் முதுகிலே கவசம் அணியும் பழக்கமில்லை!"—என்று!

அது கேட்ட இன்னொருவனுக்குக் கோபம் பொங்கிவிட்டது. அவன் பதில் சொன்னான்: "ஆமாம், எமது மன்னர் புறங்காட்டி ஓடுபவரைத் துரத்தித் தாக்கும் வழக்கமில்லை; அதனால் எமது மன்னர் முதுகிலே கவசம் அணியவில்லை!" என்று!

வீரர்கள் இருவர் சந்திக்கும் போதும், விருந்து மண்டபத்திலும், விழியாலே மொழி பேசும் காதல் அரங்கிலும் தமிழகத்து வீரம் முதலிடம் பெறத் தவறியதில்லை. புறங்காட்டி ஓடுதலும், முதுகில் தழும்பு ஏற்றலும், புலிநிகர் தமிழர் வாழும் பூமிக்கு இழுக்கு தருவன என்பதை நமது களம் புகு காதைகள் விளக்குகின்றன.

ஒரு போர்க்களம். தானைகள் மோதிக் கொள்கின்றன. யானைகள் முட்டிக் கொள்கின்றன. குருதியாறு பெருக்கெடுத்தோடுகிறது. வேலும் வாளும் விண்ணிலே மின்னி, வீரச் சிரிப்பைக் கொட்டுகின்றன. மண்ணிலே கிடக்கும் வீரர்கள் மரணத்தைப் பூரிப்போடு அணைத்து மகிழ்கிறார்கள். மார்பிலே பாய்ந்த வாளை எடுத்து முத்தமிட்டு வீரச் சத்தமிட்டு சாகிறார்கள் மறவர் குடிப் பெருமக்கள்.

அந்தக் களத்திலே ஒரு நிகழ்ச்சி வீரனொருவன் தன் கையிலேயிருந்த வேலை ஒரு யானையின்மீது எறிந்து எதிர்க்கிறான். அடுத்து இன்னொரு யானை வருகிறது, அதை எதிர்க்க அவனிடம் ஆயுதம் இல்லை. வேலோ, வாளோ தேடி அலைகிறான் கிடைக்கவில்லை. திடீரென்று நினைவு வருகிறது; அவன் மார்பிலே ஒரு வேல் பாய்ந்திருக்கிறது. அதை எடுத்து யானையின் மீது எறிய முயலுகிறான். வேல் கிடைத்தமைக்காக மகிழ்கிறான்.

இந்த வீரன் யார் தெரியுமா?

திருக்குறளிலே வரும் போர்க்களத்துக் "கதா நாயகன்"

இதோ வீரஞ்செறியும் குறள்:

"கைவேல் களிற்றொடு
போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்"

விழலுக்கு நீர் பாய்ச்சும்

வார்தா வீரர்கள்!

அ.ர்புள்ள குமார்,

ரஷ்யாவிலே பெற்ற மலர் ாலேகளின் மணம் குறையா ுன்னர் அவைகளேச் சென்னே ாசிகளுக்கும் காட்டிச் ்சன்றுவிட்டார், நேரு. ஜார்ஜ் ன்னர் இந்தியாவின் சக்கர ர்த்தியாக முடிசூட்டிக் ோண்டு டெல்லி தெ ருக்களே பவனி வந்தது ோல, 'தென்னாட்ட ர்களின் எஜமானன் ான்தான்' என்று மார் ட்டிக் காட்டிய வண் ம். காமராசரைப் பணி டைக்கென பக்கத்திலே வைத்துக்கொண்டு, மொழி பெயர்த்துச் சொல்லும் 'துபா ாக'அளகேசனேயும் அமர்த்தி, ட நாட்டு ஆதிபத்யத்தின் ுடிசூடிய மன்னரா'கத் தென் கத்திலே பவனி வந்தார்.

'முடிசூடா மன்னரை'ஜார்ஜ் ன்னரோடு ஒப்பிட்டது சில ுக்கு உப்பெனக் கரிக்கலாம். மை சரிதான், குமார்! உண் மயை வைத்துத்தான் அப்ப ச் சொல்கிறேன்.

ராஜாதி ராஜர் ஜார்ஜ் மன் ் வந்தபோது அவர் கண் லே செழிப்பும், சுபிட்சமும் ன் படவேண்டுமென்பதற் ு சூம்பிய வயிறுடையோ யும், தேம்பி அழுவோரை காம்பிலிருந்து கிள்ளி எறி படும் மலரைப்போல நக ்கப்பால் அப்புறப் படுத்தி தை பலர் சொல்லக் ன்விப்பட்டிருப்பாய் அவ் ்வு ஏன்' வெள்ளேக் கவர் ் வருகிருரென்றல் அர ங்க அலுவலகங்களிலே ன்று நடைபெற்று வந்த ளேபாரங்களே' நீ அதற்குள் ந்திருக்க முடியாதே!

தார்ந்து போயிருக்கிறது, று; அதைத் தூய்மைப் த்தி குடிநீருக்கு வழி செய் கள் — என்று கோரிக்கை டிருப்பார்கள் அந்தப் பேட் வாசிகள். அதிகாரிகளோ தைச் சட்டை செய்யாது ்னர் வருகிருர்; அவர் கண் ல் அது களங்கமாய்த் தெரி மே என்று கருதி, தூர் எடுக் மல் கிணற்றையே மூடி ட்டு அதற்குப் பக்கத்திலேயே ு 'யூனியன் ஜாக்' கொடி ய நாட்டிவிடுவார்கள். இந்த றைகெட்ட செயலே முகாரி கத்தில் தேசியத்தோழர்களே டிக் காட்டியிருக்கிருர்கள், ப் பல மேடைகளில்!

அன்று வெள்ளேநிற கவர்னர் ந்தான்—கிணற்றை மூடினர் ர்.

இன்று நேரு-அவர்கூட வெள்ளேயாகத்தான் இருந்தார்-வந்தார். சென்னே நகரத்திலே யுள்ள ஆயிரமாயிரம் பிச்சைக் காரர்களே அப்புறப்படுத்தினர் கள். 'அய்யோ, பசிக்குதே' என்று அலறியபோது அவன் பக்கம் பார்வையைத் திருப் பாத ஆட்சியாளர்கள் ஆள் வோரின் தலைவர் வருகிருர் என்பதற்காக அதிகாரிகளே ஏவி விட்டு அவர்களே 'நகர் கடத்தி' விட்டார்கள்!

குழிவிழுந்த சாலேகள் ஏழை களின் கண்களே நினைவுபடுத் திக் கொண்டிருந்தன. அந்தப் பள்ளங்கள் எல்லாம் நேருவின் வருகைக்காக சமப்படுத்தப் பட்டிருக்கின்றன. பல இடங் களில் புதிய தார் ரோடுகளே போடப்பட்டிருக்கின்றன.

ஏன் இந்த ஆர்பாட்டம்? இப்படியெல்லாம் செய்து வெள்ளேயர் ஆட்சிக்கும், தேசிய வீரர்களின் ஆட்சிக்கும் இருக்க வேண்டிய பேதத்தைக் குறைப்பானேன்?

—இந்தக் கேள்விகளுக்கு அன்று வெள்ளேயர்களும் பதில் பேசவில்லே; இன்று இந்த வடநாட்டுக்கொள்ளேயர்களும் பதில் பேசத் தயாராயில்லே.

பாட்டையிலே பள்ளங்கள் இருக்கலாம்; அதன் பக்கங்க ளிலே பரட்டைத் தலேயர்க ளான பிச்சைக்காரர்களும் இருக்கலாம்; குடிசைகளும், அதிலே உள்ள கதியற்றவர் களும் இடம் மாற்றப்படாமல் இருந்த இடத்திலேயே இருக்க லாம்.

நேரு மெருகு குலேயாத காரி லே பவனி போய்க் கொண்டி ருப்பார். குழியைக் கடந்து வாகனம் செல்லும்போது நேரு வும், அவர் மகள் இந்திராவும் உட்கார்ந்திருக்கும் ஆசனம் ஆட்டம் கொடுக்கும்—இந்திய அரசியலில் இனி நடக்க இருப் பவைகளே முன்கூட்டியே அறி விப்பதுபோல' உடனே நேரு மாஸ்கோ மாநகரிலே புல்கானி னுக்குப் பக்கத்திலே போய்க் கொண்டிருக்கும்போது பளிங் குத் தரையிலே போவதுபோல கார் உருண்டோடியதை ஒரு கணம் நினைவுக்குக் கொண்டு வருவார். பின்னர் பக்கத்திலே இருக்கும் காமராசரைப் பார்த் துக் கேட்பார்: "என்ன காம ராசரே! உமது ஆட்சியில் சாலேகள் எல்லாம் இவ்வளவு மோசமான நிலேயிலே இருக் கின்றனவே! மக்களும் அப்ப டித்தான் இருக்கிருர்கள்! அங்கு இங்கு-எங்கும் பிச்சைக்காரர் கள்! இதையெல்லாம் கவனிப் பதில்லேயா?"

—இந்தக் கேள்வி நேருவிட மிருந்து வந்ததும்; காமராசர் தன்னுடைய முழு அரசியல் தந்திரத்தையும் பயன் படுத்திக் கொண்டு:

"......இதையெல்லாம் கவ னித்து நாட்டிலுள்ள பள்ளத் தையும், மேட்டையும் சமப் படுத்தி செழிப்பு செய்வதற்கா கத்தானே **நானூறு கோடி ரூபாய் கேட்டேன்; அதற்கு இருநூறு கோடி தான் தந்தீர்கள்!** அதை வைத்துக் கொண்டு நான் என்ன செய்யமுடியும்? அணேக் கட்டுகளேக் கட்ட முடியுமா? அணேந்துபோன அடுப்புகளே மூட்ட முடியுமா? எதைச் சாதிக்கமுடியும்? இருநூறு கோடி ரூபாய் இவ்வளவுபெரிய மாநிலத்துக்கு எப்படிப் போதும்?"

—காமராசர் அந்தச் சந்தர்ப் பத்தை மாபெரும் சாதனேக் குரிய காலமாக மாற்றியிருக்க லாம். அதைச் செய்யாமல், சாலேயை வைத்தே நாட்டின் நிலேயை விளக்காமல் 'புதியன' பல உருவாக்கியிருக்கிருர்; 'பழையனவற்றை' அடித்துத் தூரத்தியிருக்கிருர். இது பொருந்துமா? புத்திசா லித்தனமா? என்று கேட்டால் வீண் புகார் கூறுவதாகப் புலம்பு கின்றன சில 'பொல் லாததுகள்'!

நேருவின் வருகைக்காகக் காமராசர் ஆட்சி பொதுப் பணத்தைக் கொட்டி சாலேகள் மட்டும் கட்டவில்லே. இன்னும் என்னென்னமோ செய்திருக் கிறது, இந்தத் தேசியத்தார் ஆட்சிமுறை!

சாலேகள் நேருவின் வருகைக் காகப் பழுது பார்க்கப்பட்டன; அந்தச் சாலேகளாவது நேரு டில்லிக்குத் திரும்பிய பிறகும் பயன்படும். ஆனல் என்றைக் கும்—எதற்கும் உதவாத 'விழல் நீர் ஏற்பாடுகள்' பல இருக்கின் றன! இதோ உதாரணத்துக் குச் சில:

ஆசியாவிலேயே மிகப்பெரிய தொழிற்சாலேயாம் பெரம்பூர் ரெயில் பெட்டி தயாரிக்கும் நிலேயம்—அதைத் திறந்துவைத் தார் ஆசியாவின் ஜோதி!

நேரு பித்தானே அமுக்கிய தும் ரெயில் பெட்டியொன்று தண்டவாளங்களிலே 'தடதட' வென ஓடியதாம்!

ஓடியது ரெயில் பெட்டி மட்டுமல்ல; பொதுமக்களின் வரிப்பணமும் உடைப்பெடுத்த வெள்ளமென ஓடியிருக்கிறது, அன்று!

இருபத்தி ஆராயிரம் ரூபாய் களுக்கு அங்குள்ள 'ஆபீசர்ஸ் கேண்டீனுக்கு'ப் பயன்படும் விதத்தில் 'ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்' மேஜைகள் பம்பாய்க்கு 'ஆர்டர்' கொடுக்கப்பட்டிருந் ததாம். பொதுவாக பெரிய சாமான்களே 'குட்ஸ் வாகன் களி'ல்தான் அனுப்புவது வழக் கம். சிக்கனமான முறையும் அதுதான்! பம்பாயிலிருந்து மேலே குறிப்பிட்ட மேஜை கள் 'குட்ஸ் வாக'னில் வருவ தென்றல் சிறு கால தாமதம் ஏற்படும். நேரு வருவதற்குள் அந்த மேஜைகள் பெரம்பூர் 'கேண்டீனில்' இருக்க வேண்டு மென்ற ஒரே காரணத்திற்காக

○ தொடர்ச்சி 8-ம் பக்கம்

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 21—10—55 வெள்ளி

நீதி வேண்டும்!

அக்டோபர் பத்தாம் தேதியன்று மாநிலப் புது அமைப்புக் குழுவினர் வெளியிட்ட அறிக்கை இந்திய உபகண்டமெங்கும் அதிர்ச்சி அலைகளைக் கிளப்பியிருக்கிறது. கோவாவிலே கொலை நடந்தபோது அதைத் தொடர்ந்து எழுந்த குமுறல் உணர்ச்சி போல பாரதமெங்கும் மக்கள் கூடிக் கூடி யோசிக்கிறார்கள்; இனி செய்யவேண்டியது என்ன—என்று கேட்டு இலட்சியப் பொறிகளாய் நடமாடுகிறார்கள்!

நெடியோன் குன்றம்போல நிலையாக இருந்த ஒரே இந்தியாவை, பிரித்த நெல்லிக்காய் மூட்டைபோல உடைத்துக் கூறுபோட்டு விட்டீர்களே—என்பதல்ல அறிக்கையைப் பார்த்து நாடு எழுப்பியிருக்கும் கேள்வி. ஏக இந்தியக் கட்டாரியை நெஞ்சிலே பாய்ச்சி எங்களை நோகச் செய்துவிட்டீர்களே—என்று எக்காள ஓசைதான் எங்கும் கேட்கிறது!

'சம்யுக்த மகாராஷ்டிரம்' கேட்டுக் கிளர்ச்சி செய்தவர்கள் வாயிலே மண்ணைப் போட்டுவிட்டார்கள்!

குஜராத்தி மொழிக்காரர்களை நோக்கி, நீங்கள் வேற்று மொழிக் காரர்களுக்குக் குனிந்து கொடுக்க வேண்டும் என்று கொடிமுத்து விட்டார்கள்!

'கிழக்கு மலைப் பகுதி மாநிலம்' கேட்ட அஸ்ஸாமின் மலைவாழ் மக்களது கோரிக்கை மதிக்கப்படவில்லை!

ஒரிஸ்ஸா மாநிலத்துடன் அதை அடுத்துள்ள ஒரிய மொழிப் பிராந்தியங்கள் சேர்க்கப்படாத காரணத்தால் கட்டாக் போன்ற இடங்களிலே கடையடைப்பும், அதைத் தொடர்ந்து பெரும் கொந்தளிப்புகளும் நடைபெற்று வருகின்றன!

ஹைதராபாத்திலே இணைக்கப்பட்டிருக்கும் தெலுங்கர் பகுதிகள் 'விசால ஆந்திரம்' வேண்டியிருந்தோருக்கு வேதனையைத் தந்திருக்கிறது!

பஞ்சாப் பிரிக்கப்படாதது அங்கே மாபெரும் போராட்டமொன்று உதயமாவப் போவதை அறிவித்தபடி இருக்கிறது!

—இவ்வண்ணம் எங்கும் உருவெடுத்திருக்கும் எதிர்ப்பு உணர்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டுதான் நாம் மாநிலப் புது அமைப்புக் குழுவின் அறிக்கையை ஆராய வேண்டியவர்களாயிருக்கிறோம். பசுல் அலிக் குழு சென்னை நகர் வந்திருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கருத்தினை தெளிவுபட எடுத்துரைத்திருக்கிறது.

"விசால ஆந்திரம், சம்யுக்த கர்நாடகம், ஐக்கிய கேரளம், தமிழகம்-எனற பெயரால் உலவும் கோரிக்கைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் முழு மனதுடன் வரவேற்பதுடன், ஆதரவும் அளித்து வருகிறது!"

—என்று வெள்ளிடை மலையென அன்றே விளம்பியிருக்கிறோம்!

இருந்தபோதும் மொழியின் வழியில் தென்னகத்தின் மாநிலங்கள் திருத்தி அமைக்கப்படுவதால் திராவிடநாட்டுப் பிரிவினை தீய்ந்து போய் விட்டதாகக் கூப்பாடு போடுபவர்களும் இந்த நேரம் இருக்கத்தான் செய்கிறார்கள்.

மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் அமைவது நம்முடைய பிரிவினைத் திட்டத்தின் முதல் படியைக் கடப்பது போலாகுமென்று நாம் பலப்பல மேடைகளிலே கூறியிருக்கிறோம்! தனித்தனி மொழிகள்; தனித்தனி மாநிலங்கள்—என்பது, மனக்கசப்பு மலையென வளர்ந்துவிட்ட காரணத்தால் பெரிய வீட்டில் இருப்பவர்கள் தட்டி வைத்துத் தடுத்துக் கொண்டு, தனிச் சமையல் துவங்குவது போல! நாளை பிரிவினை நெருப்பு கொழுந்துவிட்டு எரியும்போது தடுப்பு போதாது என்ற நிலை எழுந்து, புது வீடு அமைத்து தனிக்குடித்தனம் அமைப்பர்!

—அப்படி தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாளம் பேசும் சகோதரர்கள் புதுவீட்டில் தடுப்புகளோடு தனிக்குடித்தனம் அமைத்து தன்னிகரில்லா வாழ்வு துவங்கும் நாளைத்தான் திராவிடத் தனியரசு தோன்றும் நாள் என்கிறோம்!

தட்டி வைத்துத் தடுப்பு எழுப்பியிருக்கும் இந்தத் தருணத்தில் நமக்குரிய பொருள்களை நம்மிடம் சேர்த்துக் கொள்வதுதான் நாகரிகமான முறை! அப்படிப் பார்க்கப் போனால் பக்கத்திலிருக்கும் நம்முடைய மலையாள-ஆந்திர சகோதரர்களிடமிருந்து நமக்கு வரவேண்டிய 'பொருள்கள்' பல இருக்கின்றன!

இதுநாள் வரை திரு. கொச்சியுடன் இன்னலுக்கிடையே இணைந்து வாழ்ந்த அகத்தீசுவரம், தேவாலகல்குளம், விளவங்கோடு, செங்கோட்டை முதலிய ஐந்து தாலுக்காக்கள் தமிழகத்துக்குத் தரப்பட இருக்கின்றன. ஆனால் தேவிகுளம், பீரமேடு, நெய்யாற்றங்கரை, சித்தூர் போன்ற பகுதிகளைப் பிரித்து வைத்திருப்பதைத்தான் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

திரு. தமிழ்நாடு காங்கிரஸ் நடத்திய போராட்டத்தின் முதல் சர்வாதிகாரி நேசமணி அவர்கள் சொல்வதுபோல தேவிகுளம் தாலுகாவிலும், பீரமேடு தாலுக்காவிலும் உள்ள 1,63,643 பேரில் 1,05,316 பேர் தமிழர்கள் நெய்யாற்றங்கரை தாலுகாவிலும் 3,06,612 ஆக இருக்கும் மக்கட் தொகையில் 1,82,236 பேர் தமிழர்களாகத்தான இருக்கிறார்கள். சித்தூர் தாலுக்காவிலோ 90 சதவீதத்தினர் தமிழ் பேசுவோர்.

—இந்த நிலையில் அந்தப் பகுதிகளை தாயிடமிருந்து பிரித்து வைப்பது தாங்க முடியாத கொடுமையாகும்.

அதுபோலவே தமிழகத்தின் வடக்குப் பகுதியில் ஆந்திரத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் தமிழ் நிலங்களின் 'தலைவிதி'யை ஆந்திர—சென்னை மாநிலங்களின் உரையாடலுக்கே அமைப்புக் குழுவினர் விட்டிருக்கின்றனர்.

இந்தியாவின் தேசப்படத்திலே புதிய எல்லைக் கோடுகளைக் கிழிப்பதுதான் இந்தக் குழுவினரது கடமை! ஆனால் தமிழகத்தின் வட எல்லைப் பகுதிகளைப் பொறுத்தவரையில் எந்த அபிப்பிராயமும் சொல்லப்படாமலிருப்பதை கமிஷன் செய்யத் தவறிய கடமை என்றுதான் குறிப்பிட வேண்டும்.

தமிழ் வழங்கும் பகுதி தமிழகத்தோடு இணைக்கப்படாத அநீதியை திராவிட முன்னேற்றக் கழகம் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. பொதுச் செயலாளர் அவர்களது அறிக்கை குறிப்பிடுவது போல:

"தென்னகத்தில் மொழிவழி மாநில அமைப்புக்காக நியாயமான அடிப்படைக் கிளாசசிகளுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கி உருவான பலன் காண முயலும்."

திருத்தணிக் கிளர்ச்சியிலே நமது தோழர்கள் கலந்துகொண்டு சிறைச்சாலை சென்றதையும், நாகர்கோயில் அடையாள மறியலிலே ஜான் உள்ளிட்ட நமது தோழர்கள் செலுத்திய பங்கினையும் யாரும் மறந்திருக்க முடியாது. மீண்டும் அதுபோன்ற சூழ்நிலை உருவாகி, போராடித்தான் நாம் நமது பங்கினைப் பெறவேண்டுமென்ற நிலை பிறந்தால் மேலே சொன்ன பொதுச் செயலாளரின் அறிக்கை அமுலாகும் என்பதை சேர்ந்து வாழ நினைக்கும் அந்தப் பிராந்திய மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறோம்.

ஆந்திரமும், மலையாளமும், கர்நாடகமும் பிரிந்து சென்றுவிட்ட பிறகு எஞ்சியுள்ள பகுதியை சென்னை என்று அழைப்பதிலே சிறிதளவும் விவேகமிருப்பதாகத் தெரியவில்லை. இந்த அரசாங்கத்தவருக்கு பெயர் மாற்ற வேண்டுமென்றாலே பிடிக்காது; பிணங்கள் பல சாய்ந்த பிறகுதான் அதைப்பற்றி செவி மடுக்க சித்தப்படுவர். அதே முறையில் சென்னையைத் 'தமிழகம்' என்றோ 'தமிழ்நாடு' என்றோ அழைக்கத் தயங்குவார்களாயின் குமுறி எழும் எரிமலையை அவர்களால் தாங்கமுடியாது—என்பதையும் ஆட்சியாளருக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்!

திராவிடர் இயக்கம் பற்றி 'தாட்' ஏடு!

"**திராவிடஸ்தான் இயக்கம்**" என்னும் தலைப்பில் டெல்லியிலிருந்து வாரமொரு முறை வெளிவரும்'தாட்' என்ற ஆங்கில ஏடு அக்டோபர் 15-ந் தேதிய இதழில் தென்னகத்தின் மதிப்பு வாய்ந்த சக்தியாக வளர்ந்துவரும் நமது இயக்கத்தைக் குறித்து கட்டுரையொன்றை வெளியிட்டிருக்கிறது. **கே. ஆர். மால்கானி** என்பவர்தான் அதைத் தீட்டியவர். பெயரைக் கொண்டு பார்த்தால் அவர் ஒரு வடநாட்டவர் போல் தோன்றுகிறது! எனவேதான் அந்தக் கட்டுரையிலே உண்மைத் திரிபுகளும், இருட்டடிப்புச் செய்திகள் சிலவும் காணப்படுகின்றன.

கட்டுரைத் தலைப்பின் கீழே "இந்தக் கட்டுரையில் உள்ள கருத்துக்கள் ஆசிரியருடைய கருத்துக்கள் அலல" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது! இதோ; அந்த ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்: — ஒரு வடநாட்டுக்காரர் எப்படி தென்னாட்டில் உருவாகும் அரசியல் கொந்தளிப்பை உணருகிறார் என்பதற்கு இந்தக் கட்டுரை ஒரு ஆதாரம்!

தெற்கே சென்னையில் இந்த நாட்டின் ஏனைய பகுதியினர் புரிந்துகொள்ளாத பிரச்சினையொன்று இருந்து வருகிறது. அதுதான் திராவிடர் இயக்கத்தின் பிரச்சினை. பத்திரிகைகளெல்லாம் மௌனமாக இருந்தே அந்த இயக்கத்தைக் கொன்றுவிட நினைக்கின்றன. பிரதம மந்திரியோ எப்போதாவது போகும்போது எல்லாவற்றையும் 'நான்சென்ஸ்' என்று சொல்லிவிட்டுத் திரும்பி வந்துவிடுகின்றார். இதற்கிடையில் அந்த நோய் பயங்கரமாய் வளர்ந்து வருகிறது. இன்று அது தென்னாட்டின் அமைதிக்கே சவால் விடுவதாய் இருக்கிறது.

கழகம் இந்தியாவில் ஆரியர்கள்; திராவிடர்கள் என்னும் இரண்டே தேசிய இனங்கள் இருப்பதாகவும்; இராமாயணம் என்பது திராவிடர்களை எதிர்த்த ஆரியப் படையெடுப்பின் கதை என்றும் [இங்கு தான் அவர்கள் நேரு போன்ற 'சரித்திராசிரிய'ரது உதவியைப் பெறுகிறார்கள்!]: இப்போதைய இந்திய யூனியனில் வடநாட்டில் இருக்கும் ஆரியர்கள் தென்னாட்டிலேயுள்ள திராவிடர்களை அடக்கி வைத்திருப்பதாகவும்; தென்னாட்டுப் பார்ப்பனர்கள் ஆரியர்கள் என்றும், எனவே அவர்கள் வடநாட்டின் 'ஏஜண்டு'களாய் வேலை பார்ப்பதாகவும் நினைக்கிறார்கள். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசும் ஒரு கோடி மக்களும், அவர்கள் வசிக்கும் ஒரு லட்சத்து இருபத்தி ஐயாயிரம் மைல்களும், 1500 மைல்கள் கடற்கரைப் பிரதேசமும் சேர்ந்த சுதந்திர, சோஷலிச திராவிடக் குடியரசை உடனடியாக அமைத்தால் அல்லது தங்களுக்கு விடிமோட்சம் கிடையாது என்றும் கருதுகிறார்கள். இத்தனை விஷயங்களும் தென் இந்தியாவுக்கு அப்பால் இருப்போருக்கு நம்பத்தகாதவைகளாகத் தென்படலாம். ஆனால் அந்த இயக்கம் பத்திரிகைகளாலும், பொதுமக்களாலும் தெளிவு படுத்தப்படாமல் இருட்டிலே நடை போட்டபடி இருந்து வருகிறது. அரசியலில் அக்கரை கொண்டோர் அனைவரும் உடனே இந்த இயக்கத்தின் அடிப்படையைத் தெரிந்துகொண்டு, நியாயப்படி அவர்கள் கொண்டிருக்கும் குறைகளைப் அப்புறப் படுத்தி, சரித்திர சம்மந்தமாக அவர்கள் கொண்டிருக்கும் கற்பனைகளைக் களைந்து, இந்த நாட்டிலே ஏற்பட இருக்கும் பெரியதொரு குழப்பத்தைத் தடுத்தாக வேண்டும்.

சென்னையிலுள்ள பார்ப்பனர்கள் மொத்த ஜனத் தொகையில் ஒரு சத வீதத்தினர். ஆனால் தங்களுடைய கல்வியறிவாலும், ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளும் உணர்ச்சியாலும் மாகாணத்திலுள்ள உத்யோகங்கள் அனைத்தையும் வசப்படுத்திக் கொண்டார்கள். இதுதான் முப்பது வருஷத்துக்கு முந்திய நிலைமை. பார்ப்பனரல்லாத ஜாதிகளான செட்டி, ரெட்டி, நாயுடு, நாயர், நாயக்கர், நாடார்கள் — போன்றோர் இதை எதிர்த்து வந்தனர். ஆங்கிலேயர்களுடைய சில தத்துவங்கள், அவர்கள்தான் இந்த மண்ணுக்குச் சொந்தமானவர்கள் என்று கூறி ஒரு சார்புடைய சரித்திரப் பூர்வமான அஸ்திவாரத்தை அமைத்துக் கொடுத்தது......

(முதல் இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் போது) ஆயிரக் கணக்கானவர்கள் சிறை சென்றார்கள். அதே ஆண்டு ஈ. வே. ரா ஜஸ்டிஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். சிறைச்சாலையில் இருந்து கொண்டே அவர் செய்த தலைமை பிரசங்கத்தில் அவர் திராவிடநாடு வேண்டுமென்று கேட்டார். அடுத்த ஆண்டில் ஸ்ரீ சி. ஜி. நெட்டோ என்னும் மலையாளியைத் தலைவராய்க் கொண்ட காஞ்சிபுரம் 'திராவிடநாடு மாநாட்டி'ல் அந்தக் கோரிக்கை மீண்டும் வற்புறுத்தப்பட்டது. **1940 — பாகிஸ்தான் கேட்டு முஸ்லிம் லீக்குடைய லாகூர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேறிய அதே ஆண்டு, திருவாரூரிலே திராவிடர் மாநாடு கூடி தனி திராவிடஸ்தான் கோரிக்கையும் எழுப்பப் பட்டது.**

பெரியார் ஒரு அழகான உருவம். பார்ப்பதற்கு யூதர்களின் குருவைப்போல இருப்பார். கொள்கைப்படி அவர் ஒரு ஜனநாயகவாதி; ஆனால் நடைமுறையில் அவர் ஒரு சர்வாதிகாரி, கொள்கைப்படி அவர் ஒரு சோஷலிஸ்ட்; ஆனால் நடைமுறையில் அவர் ஒரு முதலாளி. அவருடைய இயக்கம் பிர்லாக்கள்; டால்மியாக்கள்; கோயங்காக்கள் போன்றோரது போட்டியைத் தாங்க முடியாத கோயம்புத்தூர் மதுரையிலுள்ள மில் முதலாளிகளால் உதவி பெற்று வருகிறது.

1944-ம் ஆண்டு ஜஸ்டிஸ்கட்சி திராவிட கழகம் [தென்னிந்திய மொழியினரின் கூட்டமைப்பு] பழைய கொள்கையுடனேயே திருத்தி அமைக்கப்பட்டது. ஈ.வே.ரா.வுடைய திராவிடஸ்தான் ஜாதிகளும், வகுப்புகளும் இல்லாத தனிக் குடியரசாய் இருக்கும். அவருடைய அபரிமிதமான தொண்டு திறமை வாய்ந்த வாலிபர்களான சி. என். அண்ணாதுரை, நெடுஞ்செழியன், அன்பழகன், ஈ. வே. கி. சம்பத், மதியழகன், என். வி. நடராசன், மு. கருணாநிதி போன்றவர்களை அவர் பால்இழுத்தது. ஆனால் 1949-ம் ஆண்டு எழுபது வயதுடைய பெரியாருக்கும், மகளாக அவரிடம் ஒப்படைக்கப்பட்ட முப்பது வயதுடைய மிஸ். மணி அம்மையாருக்கும் நடைபெற்ற திருமணமானது இந்த இயக்கத்தை இரண்டாகப் பிளந்தது. அண்ணாதுரை இது சமுதாய சீர்திருத்தங்களை மறுப்பதாகுமென்று கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்தார். ஈ. வே. ராவுடைய சர்வாதிகார முறைகளுக்கு இதுதான் உச்சகட்டம். தவிர இந்த இரண்டு கட்சிகளுக்கும் ஒரே குறிக்கோள் தான் பொதுவானதாக அமைந்திருக்கிறது. ஆனால் தி. மு. க. மாத்திரம் வெறியுணர்ச்சியில் குறைந்த ஈடுபாடு கொண்டதாகவும், பூணூலும் ஜாதிக் குறியீடுகளும் அணிந்து கொள்ளாத பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்வதாகவும் இருக்கிறது. **தி. மு. கவிற்கு இரண்டரை லட்சம் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்.** ஈ. வே. ராவும் இன்னும் பொது மக்களைக் கவர்ந்தபடிதான் இருக்கிறார். சி. ஆர். ஐவிட அவர் அதிகமான மக்களை சென்னையில் திரட்டி விடுகிறார்!

ஒரு சில பார்ப்பனர்கள்தான் சென்ற பொதுத் தேர்தலின்போது வெற்றியடைய முடிந்தது. வரும் பொதுத் தேர்தலில் அதைவிடக் குறைவானவர்கள்தான் ஜெயிக்க முடியும். **ஏற்கனவேயே 50—எம். எல். ஏ. க்கள் திராவிடஸ்தானை ஆதரிப்பவர்களாகச் சொல்லப் படுகிறது.** இந்த எண்ணம் இப்போது காங்கிரசிலும் தொத்திக் கொண்டிருக்கிறது. இந்தியின் பால் அது கொண்டுள்ள கருத்து (அதாவது மத்திய அரசாங்கத் தேர்வுகள் பிரதேச பாஷையிலேயே நடைபெற வேண்டுமென்பது) கழகத்தின் செல்வாக்கு பெருகி வருவதற்கான ஓர் அடையாளம்.

★

இன்றைய தினம் சரித்திரத்தை மாற்றிக் கொண்டு கழகம் மக்களிடையே பயங்கரத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது. **அதனுடைய கருத்துக்கள் பிரபல்யமடைந்த சில பத்திரிகைகளினாலும் —சினிமா மூலம் கூட! — பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.**

★

கழகத்தவர்கள் ஆரியர்; திராவிடர் என்ற விதத்திலேயே சிந்தனை செய்கிறார்கள். இன தத்துவப்படி இந்தியா சற்றேறக் குறைய ஒன்றுதான் என்பதை நிச்சயம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். சட்டப்படி அவர்களுக்கு ஏதாவது குறைகள் நேர்ந்தால் களைந்தெறியப்பட வேண்டும்; கற்பனைகளை நீக்க வேண்டும்; தேசிய ஒற்றுமையின் உண்மை நிலையையும் தெளிவுபடுத்த வேண்டும். இந்த இயக்கத்தை வெறும் "நான்சென்ஸ்" என்று கண்டனம் செய்வது மாத்திரம் பிரயோஜனப்படாது.

—இதுதான் கட்டுரையிலே உள்ள சில பகுதிகள். பயம்; பீதி; இரக்கம்; பொறாமை; வெட்கம்; மிஞ்சும் மனப்பான்மை; கெஞ்சுகிற போக்கு; சமாதானத்திலே நாட்டம்—அத்தனை உணர்ச்சிகளும் இந்தக் கட்டுரையிலே காணக் கிடக்கின்றன.

பல இடங்களிலே நாம் ஆசிரியர் கருத்துக்கு மாறுபட்டிருந்தாலும் நேருவுக்கு அவர் தரும் சூட்டினை நாம் வரவேற்கிறோம். நான்சென்ஸ் — என்று நானிலம் சுற்றிய தலைவர் ஒருவர் வசைபாடி விடுவதால் மட்டும் நம்மை அடக்கிவிட முடியுமா? திறனிருந்தால் திராவிடப் பிரிவினை கூடாதென்பதற்கான காரணங்களைக் காட்டட்டும்; அது ஒரு அழகான கற்பனை என்பதை நிரூபிக்கட்டும்—நாங்களும் மேடையேறி பிரிவினைக்கான மூல காரணங்களை வகை வகையாகப் பரிமாறுகிறோம் — பொதுமக்கள் தீர்ப்புகூறட்டும், திராவிடம் வேண்டுமா? வேண்டாமா?—என்பது பற்றி!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்



புல்கானின் பார்வைக்கு

(2) 'பஞ்சசீலப் படங்கள்'!

சமாதானப்புருக்கள் வானத்தில் வட்டமிட; விமான நிலேயத்திலே உச்சி மோந்து, உடல் தழுவி உள்ளன்போடு மோதிலால் மைந்தர் ரஷ்யாவின் திலகத்தை வரவேற்பார்.

"அன்பரே! மாதங்கள் இரண்டுகூட முடியவில்லை உம்மைப் பார்க்காமல் நான் பிரேதமாகிவிட்டேனே!" — என்று ஆனந்தக் கண்ணீர் வடித்து அன்பைக் காட்டுவார் அவர்!

"காந்தியச் சுடரே! மனிதகுல இரட்சகரே! இதோ; நீர் ரஷ்யாவில் விட்டுவந்த நும் இருதயம்!" —என்று புல்கானின் புகல; அதைத் தொடர்ந்து எழும் சிரிப்பொலியிலே சித்தம் மகிழலாம், இரு அமைச்சர்களும்!

பின் ரஷ்யப் பிரதமரைச் சுமந்துகொண்டு வாகனம் ராஜகட்டத்துக்குப் பறக்கும். அங்கே சமாதியிலே தூங்கிக் கொண்டிருக்கும் உத்தமர் காந்தியடிகளுக்கு மலர்மாலை அணிவிப்பார்கள்; சில மணித் துளிகள் மௌன விரதம் பூண்டு மரியாதை தெரிவிப்பார்கள்!

அந்த இரண்டு நிமிஷ மயான அமைதியிலே மண்ணுக்கடியிலே இருக்கும் மகாத்மா மட்டும் விருந்தாக வந்திருக்கும் புல்கானினேடு பேச ஆரம்பித்தால்......?

ஏகாதியத்யப் பித்துபிடித்த இந்த ஏக இந்திய பக்தரின் முகத் திரை கிழிக்கப் பட்டிருக்கும்! 'நல்ல முறையிலே நாடாளத்தானே சொன்னேன்! இவர்கள் நாயைப்போல மக்களை நடுத்தெருவில் சுட்டுக் கொல்கிருர்களே!'—என்று இரத்தக் கண்ணீர் வடித்திருப்பார்!

"ஸ்டாலினின் சிஷ்யரே! நடமாடும் மார்க்சின் கொள்கையே! என் சிஷ்யர்கள் உம்மை ஜாலியன் வாலாபாக்தோட்டத்துக்கு அழைத்துச் செல்வார்கள். அங்கே டயர் என்னும் பெயர் பூண்ட துரைகள் சேர்ந்தாற்போல் பத்து நிமிஷ நேரம் துப்பாக்கிச் சனியனே முடுக்கிவிட்டு துர்ப்பாக்கிய இந்தியர்கள் மீது 1650 ரவுண்டுகள் சுட்டார்கள். சுடுவதற்கு ஆள் எதிரே இருக்கும்வரை சுட்டுக் கொண்டே இருந்தார்கள்! அந்தப் பிணமலையை அஸ்திவாரமாக அமைத்துத்தான் எழுப்பப்பட்டது இந்த சுதந்தர சாம்ராஜ்யம்! முதுகு காட்டா வீரர்களின் முதுகெலும்பை மூலபலமாகக் கொண்டுதான் வெள்ளைக்கார மூர்க்கர்களை முறியடித்தோம்! அத்தகையோரின் ஆட்சியைப் பார்த்து நீங்கள் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ருல் ராஜகட்டத்துக்கு வராதீர்கள். ஜாலியன் வாலாபாக் பூங்கா அல்ல நீங்கள் பார்க்க வேண்டிய இடம். டயர் எழுப்பிய இரத்த ஆறு அங்கே காய்ந்துவிட்டது; பாட்னுவுக்குப் போய்ப் பாருங்கள். பயமறியா மாணவர்கள் சிந்திய பச்சை இரத்தம் இன்னும் காய்ந்தபாடில்லை. உரிமையை நிலைநாட்ட உயிர்துறந்தவர்களின் ஆவி அங்கேதான் அலைந்து கொண்டிருக்கிறது. அவைகளோடு பேசுங்கள்- அறம்பற்றியும், அன்புநெறி பற்றியும் அளந்து கொட்டுபவர்களின் அந்தரங்கம் அப்போதுதான் புரியும்!" –காந்தியார் அப்படித்தான்புலம்புவார்.

(2) சுட்ட கத்தரிக்காய் அல்ல;பண்டிதரின் போலிசார் சுட்டுப் பொடி செய்த தீனநாத் பாண்டேயின் முக தரிசனம்!

பாட்னு படுகொலை— நினைத்தாலே நெஞ்சு பதைபதைக்கும் நிகழ்ச்சி!

ஆகஸ்ட் மாதம் 12-ம் தேதியன்று பாட்னு பி. என். கல்லூரி மாணவர்கள் இருவரை பீகார் போலீசார் சுட்டுக் கொன்ருர்கள்.

ஆகஸ்ட் மாதம் 13-ம் தேதி அறுவர் பலியாக்கப்பட்டனர்! ஆகஸ்ட் 15-ம் தேதி ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட்டோம் என்று தேசிய வீரர்கள் தோள் தட்டி—மார்தட்டி ஆடியபோது மேலும் இருவர் அடிப்படை உரிமையைக் காத்துக் கொள்வதற்காக ஆளவந்தாரிடம் உயிரையே பணயமாகக் கொடுத்தார்கள்.

ஆகஸ்ட் 16ல்–முன்னுள்நடந்த துப்பாக்கிப் பிரயோகத்திலே படுகாய மடைந்த ஒருவர் நவடா மருத்துவ மனையிலே பிரேதமானுர்!

அதோ;பக்கத்திலே யிருக்கும் படங்களைப் பாருங்கள்!

ஐந்து படங்கள் – நேருவின் ஐந்து கருத்துடைய பஞ்சசீலக் கொள்கையைப் போல!

கண்கள் ஆகாயத்தைப் பார்க்க, அண்ணல் காந்தியாரிடம் அஹிம்சா தத்துவத்துக்கு அர்த்தம் கேட்பதுபோல துடித்துச் செத்திருக்கிருர்கள். இந்தியாவின் தூண்கள்! (படம்-1)

தீனநாத் பாண்டே–என்னும் பெயர் பூண்ட பாட்னு அறிவியல் கல்லூரியின் மாணவன்! நிம்பாலோ; தேனடையோ— என்று தித்திக்கும் மொழியுரைக்கும் மனைவியை வீட்டிலே விட்டு விஞ்ஞானம் பயில வந்தான்! கற்றுத் தேர்ந்திருந்தால் அவன் நவபாரதத்தின் சிற்பிகளில் ஒருவனுய்த் திகழ்ந்திருக்கலாம்! நாடு பல சென்று காந்தி பிறந்த மண்ணின் கீர்த்தியைப் பரப்பியிருக்கலாம்! சி. வி. ராமனுகவோ, ஜகதீஸ் சந்திரபோஸ் ஆகவோ அவன் புகழ் பூமண்டலமெங்கும் பரவியிருக்கலாம்!

வாலிப வயது!

வாஞ்சை தவழும் முகம்!

வைரம் போன்ற விழிச் சுடர்கள்!

வீரம் விளையாடும் அரும்பு மீசை!

விவேகப் பேரொளி!

அய்யகோ! அந்த பால வயதுச் சிறுவனைத்தான் பாட்னு போலீசார் பிளந்து எறிந்துவிட்டார்கள்!

சித்திரம்போல் இருந்தான்— சின்னுபின்னமாக்கி விட்டார்கள்!

சிரிப்பு விளையாடிய முகம்!— சொறி நாயைப்போல சுட்டுப் புண்ணுக்கிவிட்டார்கள்!

அன்பரே-என்று ஆசையோடு அழைத்து, எந்தக் கன்னங்களை அதரங்களால் கிள்ளி அவன் காதலி மகிழ்ந்தாளோ அந்தச் செங்கனிகளை துண்டு துண்டாகக் கிழித்து விளையாடிவிட்டது காந்தியின் சீடர்கள் கிளப்பிய தோட்டா வெடிகள்!(படம்-2)

துணைவனைத் தொலைத்துவிட்டார்கள், தேசியத் துரைத்தனத்தார்—என்று கேள்விப்பட்டதும் அந்தப் பண்புடை மங்கை தற்கொலை செய்து கொண்டாளாம்!

கயிறு கழுத்தை நெறித்தோ அல்லது விஷம் வேலை செய்தோ அந்த வேல்விழியாள் உயிர் துறந்தபோது அவள் இருதயம் எப்படித் துடித்ததோ? தாலியறுந்த அரசாங்கத்தை எப்படியெப்படி வாழ்த்திஞளோ?— அதையெல்லாம் புல்கானின் கேட்கமுடியாது! ஆனுல் படத்தைப் பார்த்து பண்டிதர் ஆட்சியின் பவிஷைப் புரிந்து கொள்ளலாம்!

தப்பிவிட்டோம் என்று நினைத்துத்தானே என்னவோ வேருெரு மாணவச்சிறுவன்வீட்டிற்கு ஓடியிருக்கிருன்! ஆனுல் இந்தவிவேகமற்றோர்ஆட்சியோ வீரமென்று கருதி அவன் முதுகிலே தோட்டாவைப் பாய்ச்சி மகிழ்ந்திருக்கிறது! (படம்—3)

நான்காவது படத்தைப் பாருங்கள்!

இரத்த ஆற்றிலே மிதந்து கொண்டிருக்கிருன் ஒரு மாணவன், இந்தியாவின் இரத்தினம் தனக்களித்த பரிசை மார்பிலே

(1) கண்கள் ஆகாயத்தைப் பார்க்க, அண்ணல் காந்தியாரிடம் அகிம்சா தத்துவத்துக்கு அர்த்தம் கேட்பதுபோல துடித்துச் செத்திருக்கிருர்கள்; இந்தியாவின் தூண்கள்!

★தொடர்ச்சி 11-ம் பக்கம்

புதையல்

மு. கருணாநிதி

சென்ற இதழில்.....

மேனகாவைக் கொலை செய்யமுயன்ற குற்றத்தை குடுகுடுப்பைக்காரன் மீது சுமத்தி, அவனைக் கைது செய்ய போலீசுக்கு ராமன் மூலம் தகவல் அனுப்புகிருர் அம்பலம். ராமன் செல்லும் வழியில் ஷோக் சுந்தரியை சந்தித்து மயங்கிருன். அந்த ஷோக் சுந்தரி அம்பலத்திடம் வந்து ஆதாவு கோரவே, அவர் அவனையும் துரையையும் தம்பதிகளாக்கிப் பலி கொடுக்கத் திட்டம் தீட்டுகிருர். இந்த விஷயம் ராமன் மூலம் குடுகுடுப்பைக்கார(பரிமளா)னுக்குத் தெரிகிறது. ஷோக் சுந்தரிக்காக பரிதாபப்படுகிருன். அப்போது ஷோக் சுந்தரி, தான் பெண்ணல்ல என்று கூறி உடைகளைக் கழற்றுகிருள்.

45

மீண்டும் - - தியாகம்!

“எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே...
காக்கை மூக்கு நிழலிலே...
கள்வர் புகும் வழியிலே...
கண்டாலும் ‘கம்மாளர்’ கண்ணிலே...
எழுபது கோடி பசும்பொன்... ”

பரிமளாவின் திகைப்பை அதிகப்படுத்துவது போல ஷோக் சுந்தரி திடீரென மறைந்து விட்டாள். அவள் நின்ற இடத்திலே ஆண் உடையிலே துக்காராம் நின்றுகொண்டிருந்தான். வழக்கமான அவனது கோமாளித்தனத்தின் அடையாளமாக, குடுகுடுப்பைக்காரனின் ஜோஸ்யத்தையும் திறமையையும் கிண்டல் செய்வதற்காக ஷோக் சுந்தரி வேடத்தைக் கலைத்துவிட்டான் என்ருலும், பரிமளாவினுல் அதையெல்லாம் ரசிக்க முடியவில்லை.

“யார்? துக்காராமா?” என்று படபடப்போடு கேட்டு விட்டாள். “என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்?” என்று குடுகுடுப்பைக்காரனைப் பார்த்து, துக்காராம் முறைத்தான்.

“தெரியும்–உன்னைத் தெரியாமல் இருக்குமா? உன் பெயரால் வந்த வினைதானே இவ்வளவும்! என்று பரிமளா தனக்குத் தானே சலித்துக் கொண்டாள். எதிரே நிற்பது யார் என்று உணரமுடியாத நிலையில்இருந்த துக்காராம்–சிறிது அஞ்சியவனுய், “ஒருவேளை, நீ துப்பறியும் இலாக்காவோ?” என்று சந்தேகத்தோடு கேட்டான். ‘இல்லை!’ என்று பரிமளாவும் தனது வேடத்தைக்கலைத்தாள்.

அண்ணன் தங்கை என்ற அழியாத பாசத்தோடு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே நின்றனர். துக்காராமின் கண்களிலேயிருந்து நீர் தாரை தாரையாக வடிந்தது. பரிமளாவின் கண்களோ நீர் வீழ்ச்சிகளாயின. விவரிக்க முடியாத மௌனத்தின் விளிம்பிலே இருவரும் நின்று கொண்டு, வேதனைகளை விழிகளால் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். பரிமளாவின் இதழ்கள் மெதுவாக அசைந்தன.

“துக்காராய்! இங்கேஎப்படி வந்தாய்?”

“ஜெயிலிலேயிருந்து தப்பி வந்தேன்.”

“அய்யோ–அதுபெரிய குற்றமாயிற்றே!”

“இருக்கட்டுமே—முதல் குற்றம் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டால் மரண தண்டனை தான் அநேகமாகக் கிடைக்கும். ஜெயிலிலேயிருந்து தப்பிய குற்றத்திற்கு என்ன தண்டனை கொடுக்க முடியும்? எனக்கு நிச்சயமாய்த் தெரியும்; எந்த நீதிபதியாலும் சரி—இரண்டு மரணதண்டனை ஒருத்தனுக்குக் கொடுக்க முடியாது! அதனுல் எனக்குக் கவலையே இல்லை!”

“நீ ஜெயிலிலேயிருந்து எதற்காகத் தப்ப வேண்டும்?”

“ஜெயில்ல இருக்கிறவன், தப்பநினைக்கிறது அதிசயம் ஒண்ணுமில்லியே! ஆனுப் பரிமளா, நான் தப்பிச்சது உயிர் மேல் உள்ள ஆசையால் அல்ல! உன்னை ஒருதடவை சாகிறத்துக்குள்ளேபாத்துவிடணும்னு தான் ஆசைப்பட்டேன். அதுக்காகத்தான் ஜெயிலைவிட்டு ஓடிவந்தேன். எப்படியும் சாகப்போறேன். மரண தண்டனையிலேயிருந்து மீளமுடியாது! அதற்குள்ளே உன் திருமுகத்தைப் பார்க்கணும்னு நான் பட்டபாடு கொஞ்சமல்ல சகோதரி! எவ்வளவோ ஆபத்தையெல்லாம் கடந்து தப்பித்து வந்தேன்.

அன்று நீ வீட்டுக்கு நெருப்பு வைத்து என்னை வெளியேறும்படி யோசனை சொன்னுயே; உன் பேச்சைக் கேட்காமல், தங்கம் போன்ற உன் உடலைத் தரையிலே உருட்டிவிட்டு நான் போலீஸ்காரர்களிடம் சரணுகதி அடைந்தேன் அல்லவா; அன்றுமுதல் ஐந்தாறு நாட்கள் போலீஸ் ஸ்டேஷனில் அடைபட்டுக் கிடந்தேன். அந்த நாட்களிலே, ஏதோ ஒரு பெரிய தியாகம் செய்துவிட்ட உணர்ச்சி மட்டுமே எனக்கு இருந்தது. ஏனென்ருல் நான்மட்டுமே அந்த ஸ்டேஷனில் தனியாக இருந்தேன். பிறகு அங்கிருந்து பெரிய ஜெயிலுக்கு மாற்றினுர்கள். ரிமாண்ட் என்ற பெயரிலே என்னைப் பூட்டி வைத்தார்கள். பெரிய ஜெயிலில் பெரிய ஆட்கள் எல்லாம் இருந்தார்கள். சைக்கிள் ரிப்பேர் செய்கிற துக்காராம் மாத்திரம் அல்ல; சைக்கிளையே உற்பத்தி செய்கிற முதலாளிகள் சிலர்கூட மோசடி கேசிலே சம்பந்தப்பட்டு உள்ளே இருந்தார்கள். ஜெயில் என்ருல் என் மனசிலே இருந்த பயம் போய்விட்டது. ஜெயிலிலே மனிதனை வாட்டக்கூடிய ஒரே ஒரு சங்கடம் தனிமைதான். ஆனுல் எனக்கு அந்தத் தனிமைதான் சந்தோஷம் தந்தது. வெளியிலே இருந்தாலும் இதே தனிமைதான் எனக்குக்கிடைத்திருக்கும்.

நீ எனக்கு இல்லை என்று முடிவாகிவிட்ட பிறகு கோடீஸ்வரன் குமாரி வந்தாலும், ரவிவர்மா பிக்சர் மாதிரி ஒரு ரதியே வந்தாலும் ஜோடியாக வாழ நினைப்பேனு நான்! என்னுடைய லைப் லட்சியமே பரிமளாதான்! அவள் எனக்குத் தங்கையாகி விட்டாள். அதற்குப் பிறகு எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் எனக்கு சகோதரியாகத்தான் தெரிகிறது. அதனுல் ஜெயிலின் தனிமை எனக்கு ரொம்ப உற்சாகமூட்டியது.

என்மீது பதிவான கேஸ் சம்பந்தமான முழு ஜோடிப்பு வேலைகளும் முடிவாகவில்லையாம், அதனுல் கோர்ட்டுக்குப் போகவேண்டிய வேலை இன்னும் வரவில்லை. என்னுடைய வழக்கைப் பற்றி விசாரித்த கைதி நண்பர்களும், வார்டர்களும், நிச்சயமாக எனக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கிடைக்கும் என்று தீர்ப்பு சொல்லிவிட்டார்கள்.

நான் வெட்டிக் கொன்றதற்கு யாரும் நேரில் பார்த்த சாட்சி கிடையாதே யென்று ஒருவனிடம் வாதாடிப் பார்த்தேன், ஜெயிலில்!

சாட்சிகள் என்ருல் என்ன அர்த்தம் என்பதை அவன் எனக்குப் புரியும்படியாகச் சொன்னுன். அதெல்லாம் எதற்கு வீண் கதை!

தனிமையை அனுபவித்துக் கொண்டிருந்த என் நெஞ்சிலே மரணதண்டனையைப் பற்றிய எண்ணங்கள் கொஞ்சங்கொஞ்சமாக எட்டிப் பார்க்க ஆரம்பித்தன. நான் ரிமாண்டில் இருக்கும் காலத்திலேயே மூன்று நான்கு பேரை விடியற்காலையில் தூக்கு போட்டுத் தண்டனையை நிறைவேற்றினுர்கள். அவர்களைத் தூக்கு மேடைக்கு அழைத்துப் போகும்போது அவர்கள் போட்ட சப்தம் என்னைக் கலங்க அடித்தது.

“அய்யோ!...இன்னங்கொஞ்ச நாழிக்கெல்லாம் உலகம் மறைந்து போய்டுமே! எதையுமே பார்க்க முடியாதே!” என்று ஒருத்தன் கத்தினுன்,

"அம்மா—என் தங்கச்சி!...... உங்க அண்ணனை கொல்லப் போறாங்க...அய்யோ, சாகறத்துக்கு முன்னே ஒரு தடவை என் தங்கையைப் பாக்க முடியாதா?"

இப்படிக் கத்திக் கொண்டே போனான் இன்னொருத்தன். தங்கச்சி என்ற அந்த வார்த்தை என் உள்ளத்தைப்பிளந்துவிட்டது. பரிமளா!...உன்னை ஒருமுறை பார்க்க வேண்டுமென்ற ஆசையை அந்த வார்த்தைதான் தூண்டிவிட்டது. கோர்ட்டு—வழக்கு---தீர்ப்பு—தூக்கு-இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டிருந்த என் இருதயத்திலே உன்னை ஒரு முறை பார்த்துவிட வேண்டும் என்ற திராத ஆசை முளைவிடத் தொடங்கிவிட்டது. எப்படியும் சாகத்தான் போகிறோம், அதோடு தப்பி ஓடியதற்கும் சேர்த்துத் தண்டனை தரட்டுமே என்று முடிவு செய்தேன். பயம் ஒழிந்தது.

கொடுமையான வயிற்றுவலி என்று பாசாங்கு செய்து கீழே விழுந்து புரண்டேன். டாக்டர்களால் சீக்கிரம் கண்டு பிடிக்க முடியாத வியாதி அதுதான்!

நான் பள்ளிக்கூடத்திலே படிக்கும்போது சின்னப்பிள்ளையிலே அப்பா அம்மாவை ஏமாற்றி பள்ளிக்கூடம் போகாமல் இருக்க அந்த முறையைத்தான் கையாளுவேன். ஜுரம் என்றால் உடம்பைத் தொட்டுப் பார்த்துப் புரிந்து கொள்வார்கள். தலைவலிக்குக்கூட நரம்பு புடைத்திருக்கிறதா என்று பார்ப்பார்கள். பொய் வயிற்றுவலியை சீக்கிரம் கண்டுபிடிக்கவே முடியாது. என் தந்திரம் ஜெயித்தது.

என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள் சிகிச்சைகள் நடந்தன. போலீஸ் காவலும் பலமாகத்தான் இருந்தது. படுக்கையைச் சுற்றி! இரண்டு மூன்றுநாள் கண்விழிப்பு—அவர்கள் என் படுக்கை அருகே உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். இதுதான் சமயம் என்று பறப்பட்டேன். தப்பி விட்டேன். உன்னை எப்படியாவது பார்த்துவிட வேண்டுமென்று தவித்தேன் போலீசார் என்னை விரட்டுகிறார்கள் என்பதும் தெரிந்துவிட்டது. ஷோக் சுந்தரியாக மாறினேன்.

உன்னை ஊரெல்லாம் தேடினேன். உன் காதலன் துரை, இங்கு சிக்கியிருப்பதை மட்டும் தெரிந்துகொண்டேன். உன்னைப் பார்க்கவே முடியாது என்று தீர்மானித்த பிறகு, உன் ஆசைக் காதலனுக்காவது ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று இங்கு வந்தேன்! வந்த இடத்திலே, நான் தேடி அலைந்த தெய்வத்தை தரிசனம் செய்து விட்டேன்"

—என்று கூறி அவளது கரங்களை எடுத்துத் தன் கண்களிலே ஒத்திக் கொண்டான் துக்காராம். அந்த நிகழ்ச்சியிலே களங்கம் அணுவும் தலைகாட்டவில்லை. தூய்மை, கொடிவிட்டுப் படர்ந்து கிடந்தது.

"துக்காராம்! யாரோ ஒரு ஆசைக்காரப் பிசாசின் அகண்ட வயிற்றை நிரப்புவதற்காக நாமெல்லாம் நமது வாழ்க்கையை பாலைவனமாக்கித் தீரவேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டோம்"

—என்று பரிமளா, விம்மியழுதாள். ஆனால் அவளது நெஞ்சிலே புதுப்புது திட்டங்களும், புயல் வேக நினைவுகளும் சுழன்றபடியிருந்தன.

புதையலுக்காக பறிகொடுக்கப்படும் துரையோடு தானும் தலைகொடுக்கலாம் என்ற திருப்தி உதயமாயிற்று அவளுக்கு! எப்படி? துக்காராமைக் குடுகுடுப்பைக்காரனாக மாற்றிவிட்டால் அவனுக்கு விடுதலை கிடைத்துவிடும். குடுகுடுப்பைக்காரன் மீதும் அம்பலத்தின் அக்கிரமக் கண்கள் விழுந்திருக்கின்றன என்பது அந்த அபாக்யவதிக்குத் தெரியாது! துக்காராம், தன்பொருட்டு செய்த தியாகத்தை மனதில் வைத்துக் கொண்டு அதற்குப் பிரதி உபகாரமாக அவனைக் குடுகுடுப்பை வேடத்திலே வெளியேற்றிவிடத் தீர்மானித்தாள் அவள். குடுகுடுப்பைக்காரன் வேடம் போட்டுக்கொள்ள துக்காராமும் சம்மதித்து விட்டான். பரிமளா, சொல்லாவிட்டாலுங்கூட, குடுகுடுப்பைக்காரன் பரிமளாதான் என்று தெரிந்த பிறகு அவனே அந்த வேடத்தைப் போட்டுக் கொள்ளத்தான் நினைத்தான்.

அவனுக்குத் தெரியும்; குடுகுடுப்பையாக மாறினால், இன்னொரு கொலைவழக்கு தன்மீது விழும் என்று! அப்படித் தெரிந்தும் ஒத்துக்கொண்டான். காரணம்? பரிமளா, பகவதியாக இருந்தால் அவள்மீது 'மேனகா குத்தப்பட்ட குற்றம்' சுமத்தப்பட்டு விடும். அதிலிருந்து அவளைக் காப்பாற்ற வேண்டியது தன்னுடைய கடமையென்று முடிவு செய்தான் துக்காராம். ஆகவே, பகவதியைக் காட்டிக் கொடுக்க அம்பலம் போட்டிருக்கும் திட்டத்தைப் பற்றியும் துக்காராம் அவளிடம் அதிகமாக விவரிக்கவில்லை. அவன் ஷோக் சுந்தரி வேடத்திலே இருந்தால், பலி கொடுக்கப்பட்டிருப்பான் என்ற பயங்கர சதித்திட்டத்தையும், பரிமளா அவனிடம் வெளியிடவில்லை. வெளிபிட்டிருந்தால், துக்காராம், பரிமளாவின் வேடத்தைக் கலைக்கவும், தான் குடுகுடுப்பாண்டி வேடம் அணிந்துகொள்ளவும் சம்மதித்திருக்க மாட்டான். ஷோக் சுந்தரியாகவே இருந்திருப்பான். பரிமளாவின் திட்டப்படி துக்காராம் மலையாள பகவதியாக மாறிவிட்டான். பரிமளா, பரிமளாவாகவே இருந்தாள். அத்தான் துரையோடு சேர்ந்து உயிர்விடப் போகிறோமே யென்ற மன ஆறுதல் அவளுக்குப் புதிய உற்சாகத்தைத் தந்தது.

கல்யாணமாகாத பெண்ணாக இருந்தால் பலியாகித்தீரவேண்டும் என்ற நிலைமை அம்பலத்தின் திட்டத்திலே இருக்கிறது என்பதைத் துக்காராம் உணரவில்லை. உணர்ந்திருந்தால் அவன் பரிமளாவின் பகவதி வேடத்தைக் கலைத்தே யிருக்க மாட்டான்.

அவளுக்கு உபகாரம் செய்வதாக நினைத்துக்கொண்டு, உயிர் போகும் காரியத்துக்கு அவளைத் தயார் படுத்தினான், அவனையறியாமலே! அவளும் அவனை விடுவிப்பதாக எண்ணிக்கொண்டு, கொலை வழக்கிலே இரண்டாவது முறையும் அவன் சிக்குவதற்கு எப்படியோ தன்னையறியாமல் காரணமாகிவிட்டாள்.

இருவரையும் விழுங்கி ஏப்பமிடக் காத்திருப்பதுபோல் அம்பலம், மேனகாவின் படுக்கையின் பக்கம் உட்கார்ந்திருந்தார் மேனகாவின் உயிர் சிறிது சிறிதாகப் பிரிந்துகொண்டிருந்தது. முழுவதுமே போய், உடல் ஜில்லிட்டுப் போகும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் அம்பலம். எதிர்காலத்தைப் பற்றி இன்பக் கனவு கண்ட நேரத்திலே தனக்குத்தானே ஆயிரம் திட்டங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்த மேனகா, ஒரு வார்த்தையும் பேச முடியாதவளாகிவிட்டாள். பேச்சு அடங்கியது—கடைசி மூச்சும் காற்றோடு கலந்தது.

மேனகா போய்விட்டாள். பருவ மலராக, பளிங்குச் சிலையாகக் காட்சி அளித்த அவளை, இனி மண்தான் முத்தமிடும்!

மேனகா கண்ணை மூடிவிட்டதைப் பார்த்ததும் அம்பலம் அழுதார். ஆம், அழுது அவள் மீது ஆசை யிருக்கிறது என்பதைக் காட்டிக்கொண்டார்.

அம்பலத்தின் பஞ்சணையிலே, அவர் படைத்த பிணம் கிடந்தது. ராமனிடம் சொல்லி அனுப்பியபடி போலீசாரும் வந்தார்கள். மேனகாவின் கொலை பற்றிய விபரங்களைத் தந்தார் அம்பலம். கொலைகாரன் எங்கே யிருக்கிறான் இப்போது என்று போலீசார் தேடத் தொடங்கினார்கள்.

உடனே அம்பலம், தன்னுடைய ஆட்களைப் பார்த்து, "என் கண்மணியைக் கொன்ற அந்தப் பாதகனை இழுத்து வாங்கடா!" என்று கூவினார். போலீசாருக்கு நேரே மேனகாவின் பிணத்திற்கான ஒப்பாரியை சுருதி பிசகாது இசைத்துக் கொண்டேயிருந்தார். முரடர்கள் கதவைத் திறப்பதைப் புரிந்து கொண்ட பரிமளா, அறையின் ஒருமூலையிலே பதுங்கிக் கொண்டாள். துக்காராம் அவளிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான். அவனுக்குத் தெரியும், தான் மறுபடியும் சிறைச் சாலைக்குப் போகிறோமென்பது!

பரிமளாவோ, அவனைத் தனது திறமையால் விடுவித்துவிட்டதாகக் கருதி சந்தோஷத்தோடு விடைகொடுத்து அனுப்பினாள். அப்போது அவள் சிந்திய ஆனந்தக் கண்ணீரை, அவன் என்னமோ. சோகக் கண்ணீராகத்தான் கருதினான்.

வெளியே வந்த குடுகுடுப்பைக்காரனை சப்இன்ஸ்பெக்டர் ஏற இறங்கப்பார்த்தார். அம்பலம், தனக்கிருந்த அவசரத்தில் குடுகுடுப்பைக்கார வேடம் இன்னொரு கைமாறி விட்டது என்கிற உண்மையைக்கூட புரிந்துகொள்ளவில்லை துக்காராம் கையில் விலங்கு மாட்டப்பட்டது.

அவன், தன்னுடைய பரிமளாவுக்காக இரண்டாவது தடவையும் தியாகம் செய்கிறோம் என்கிற உறுதியோடும் உற்சாகத்தோடும் போலீசாரின் பின்னே போய்க் கொண்டிருந்தான்.

பரிமளாவோ, துக்காராம் போலீசிடம் ஒப்படைக்கப்பட்ட விபரம் தெரியாமல் ஆனந்தப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். இப்போது அவளது நினைவெல்லாம் தானும் தன் அத்தானும் எப்போது சேர்ந்து சாகடிக்கப்படப் போகிறோம் என்பதைப் பற்றித்தான்.

அம்பலமும், மேனகாவின் பிணத்தை எரித்துச் சாம்பலாக்கிவிட்டு துரையின் கல்யாணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க முனைந்தார். கல்யாணத்தை சீக்கிரம் முடித்தால் தானே காவு கொடுத்து புதையலை விரைவில் எடுக்க முடியும் என்று துடித்தார் அவர். துரையின் மீது மேனகா விஷயமாக அவருக்கேற்பட்ட ஆத்திரம் அவனை விரைவில் பலி கொடுத்துப் பழி வாங்கிவிட வேண்டும் என்ற அவசரத்திற்குக் கொண்டு வந்து விட்டது.

[வளரும்]

விரைவில் ஆரம்பமாகிறது !

கருணாநிதி

எழுதும் புதிய தொடர்கதை !

வெள்ளிக்கிழமை

'உங்கள் பார்வை' உங்கள் பகுதி. அன்றாட அரசியல் நிகழ்ச்சிகளின் விமர்சனம், மக்கள் கவனத்துக்குரிய உள்ளூர் நிகழ்ச்சிகள்- இவை பற்றி சுருக்கமாக எழுதி அனுப்புங்கள்--பிரசுரிக்கிறோம்.

[சி]கை அலங்கார நிலையத்தைப் பற்றி!

சென்னை ஜில்லா மருத்துவர் சங்கம்,
17-10-55.

[ஆ]சிரியர் அவர்களுக்கு,

சென்னை நகரத்திலுள்ள சிகை அலங்கார நிலையங்களுக்கு [சலூன்)] சென்னை நகரசபை சில [ஆ]ண்டுகளாக மூன்று நாற்காலிக[ளு]க்கு ஐந்துரூபாயாகவும், அதற்கு [மே]லுள்ள ஒவ்வொரு நாற்காலிக்கு இரண்டு ரூபாயாகவும் [லை]சென்சு கட்டணம் விதித்திருக்[கி]றார்கள்.

மேற்கண்ட கட்டணம் அமு[ல]ாவதற்கு முன் மூன்று நாற்காலிகளுக்கு ஒரு ரூபாயாகவும், அதற்குமேலிருந்தால் நாற்காலி [ஒ]ன்றுக்கு ஒரு ரூபாயாகவும் [லை]சென்சு கட்டணம் இருந்து [வ]ந்தது.

பொதுமக்களின் சுகாதார நல[த்]தைக் கருதியும், தொழிலுக்கு இழி[வி]ல்லை என்ற பெரு நோக்கோடும் [தா]ன் மருத்துவ சமூகத்தார்கள் [இ]த் தொழிலை விடாது தொடர்ந்து [செ]ய்து வருகிறார்கள். சிகை அலங்[கா]ரிக்கும் தொழில் மிகவும் இழி[வா]னதென்று கருதியே மற்ற சமூ[க]த்தினர்களும், தொழிலாளர்க[ளு]ம் இத்தொழிலைக் கைக்கொள்ள [இ]ன்றுவரை யாரும் முன்வர[வி]ல்லை.

தற்சமயம் சிகை அலங்கார நிலை[ய]ங்கள் லாபகரமாக நடைபெற[வி]ல்லை. வரவிற்குள் செலவை சரிக்[க]ட்டவே முடிவதில்லை.

மதுரை, கோவை நகரசபைகள் அங்குள்ள சிகை அலங்கார நிலை[ய]ங்களுக்கு நியாயமான முறை[யி]ல் லைசென்சு கட்டணங்களைக் [கு]றைத்திருக்கிறார்கள்.

சென்னை நகரசபையும், சென்னை [ந]கர சிகை அலங்கார நிலையங்க[ளு]க்கு லைசென்சு கட்டணம் [உய]ர்த்தியிருப்பதை, ஏற்கனவே [இ]ருந்த அளவுக்கு குறைக்கவேண்[டிய]து மிகவும் அவசியமாகும்.

டாக்டர், ந. சிவானந்தம்.

[தேர்]தலில் போட்டியிடுவோம்!

காயாகொழி
1[illegible] 10-55

[ஆசிரி]யர் அவர்களுக்கு,

[..]-10—55 இதழில், தோழர் [..]பரிதி அவர்கள் எழுதிய இருக்கிறார்கள். ஆவடிக்கா[..] என்ற கட்டுரையை படித்தேன். மகிழ்ந்தேன். காங்கிரசுக்கு ஆதரவு அதிகரி[த்]து வருகிறது என கூவுவோருக்கு இது ஒரு நல்ல பதில். நாடு முழுவதுமே இந்நிலை தான் நிலவுகிறது. இவர்களுக்கெல்லாம் நல்ல புத்தி புகட்டவும் காங்கிரசிற்கு ஒரு எதிர்ப்பு சக்தி உண்டு என்றால் அது தி. மு. க. தான் என்பதை நாட்டுமக்களுககு அறிவிக்கவும், வருகிற தேர்தலில் நாமும் கலந்துகொள்ள வேண்டும். இதற்குரிய வழிகள் மாநில மாநாட்டில் வகுக்கப்படுமென எதிர்பார்க்கிறேன்.

தங்கள்,
கே. எஸ். சேசவன்.

தேவகோட்டையில் நம் தோழர்கள் வெற்றி!

தேவகோட்டை
14-10-55

நடந்த நகரசபைத் தேர்தலில் தேவகோட்டையில் நம் கழகத் தோழர்கள் மூவர் சுயேச்சை அபேட்சகர்களாக போட்டியிட்டனர்.

அதில் 15-வது வார்டில் திரு. சா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

7-வது வார்டில் நகர தி. மு. கழகச் செயலாளர் திரு. உ. சீனிவாசன் அவர்கள் தன்னுடன் போட்டியிட்ட காங்கிரசு அபேட்சகர் திரு. ம. முகம்மது இப்ராஹிம் அவர்களை 102-நூற்றிரண்டு வாக்குகள் அதிகம் பெற்று தோற்கடித்து, வெற்றி பெற்றிருக்கிறார்.

11-வது வார்டில் நம் கழகத் தோழர் இராம. வெள்ளையன் அவர்கள், தன்னுடன் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர் திரு ராம. சுப்பிரமணியன் அவர்களை 128-வாக்குகள் அதிகம் பெற்று தோற்கடித்து வெற்றி பெற்றிருக்கிறார்.

குறிப்பு; 7-வது வார்டு
மொத்தம் பதிவான வாக்குகள் : 396
உ. சீனிவாசன் பெற்றவை : 245
ம. முகம்மது இப்ராஹிம் : 144
7-வது வார்டில் செல்லாத வாக்குகள் : 6
11-வது வார்டு :
மொத்தம் பதிவான வாக்குகள் : 587
இராம. வெள்ளையன் : 354
ராம. சுப்பிரமணியன் : 225
செல்லாத வாக்குகள் : 7

தங்களன்புள்ள,
உ. சீனிவாசன்.
செயலாளன்

பொன்முடியின் கடிதம்...

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அவ்வளவு மேஜைகளையும் பாசஞ்சர்' ரெயிலிலேயே அனுப்ப ஏற்பாடு செய்தார்களாம்! அதற்கான செலவு **பத்தாயிரம் ரூபாய்களாம்!**

—இந்த நிலை குறித்து கண்ணீர் வடிப்பதா; அல்லது நேரு வருவதற்குள் வந்துவிட வேண்டுமென்று மேஜைகளை ஆகாய விமானத்தின் மூலம் அனுப்பச் சொல்லாமலிருந்தார்களே? என்று களிப்படைவதா? —இப்படி அமைந்திருக்கிறது நமது மனோ நிலை!

அலுவலகத்திற்கு முன்னால் உள்ள வெறும் தரையில் புல் வளர்க்கலாம்—என்று யோசித்தார்களாம். ஆனால் இந்தத் தாமதமான யோசனை நிறைவேறுவதற்குள் நேரு வந்துவிடுவாரே என்று எண்ணி, அவசர அவசரமாக தேங்காய்ப் புண்ணாக்கு போன்ற உரங்களை உபயோகித்து புல் முளைக்க விட்டிருக்கிறார்கள், பாரத வீரர்கள்!

உணவில்லாமல் தவிக்கிறான், மனிதன்! அங்கே புல்லுக்கு எருவாக புண்ணாக்கைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்!

அது மட்டுமல்ல; நேரு பார்க்க வேண்டுமென்பதற்காக தனிச்செலவில் பிரத்யேகமாக வாயிற்புரத்தில் கல்லால் ஆன ஒரு மாபெரும் வளைவு ஒன்றையும் சிருஷ்டித்திருக்கிறார்கள்!

ஒரு தனிமனிதனின் வருகைக்காக வரிப்பணம் தண்ணீரென செலவழிக்கப்பட்டிருக்கிறது.

மனிதர்கள் பிரயாணம் செய்ய வேண்டிய ரயில் பெட்டியிலே மரத்தாலான மேஜைகள் அதிகக்கட்டணம் செலுத்திப் பிரயாணம் செய்திருக்கின்றன!

கேவலம் புல்லுக்குப் புண்ணாக்கை உரமாகப் போட்டிருக்கிறார்கள்!

—இப்போது புரிகிறதா குமார், நான் ஏன் ஜார்ஜ் மன்னர் வருகையையும், மோதிலால் மைந்தர் வருகையையும் ஒப்பிட்டேனென்று!

இரு ஏகாதிபத்யத் தலைவர்களுக்கும் அதிகவித்யாசமில்லை.

முழுக்க முழுக்க பார்ப்பனர்களே நிரம்பியிருக்கும் அந்தத் தொழிற்சாலையில் நேரு முடுக்கி விட்டதும் ஓடியதே ரயில் வண்டி அது இந்தியாவில் தயாரான முதல் ரயில் வண்டியல்ல. அவை அனைத்தும் ஸ்விட்சர்லந்து சரக்காம். ஒன்று சேர்த்திருக்கிறார்கள், பெரம்பூர் தொழிற்சாலைக்காரர்கள்—'பிளிட்ஸ்' ஏடு இப்படி வண்டவாளங்களை யெல்லாம் விளக்கியிருக்கிறது குமார்!

இன்னும் சில ஆண்டுகள் சென்றால் ஜனநாயகம் பேசும் நேருவின் தலையிலே ஒரு மணிமகுடத்தையும் சூட்டிவிடுவார்கள், அவரைச் சூழ்ந்து நிற்கும் 'ஜே' கோஷ்டியினர்!

அன்புள்ள,
பொன்முடி.

மகத்தான மூன்றாவது வாரம்!
வேலூர் முள்ளிப்பாளையம் தியேட்டரில்
இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன்
நாடக மன்றத்தினரின் தினசரி நாடக நிகழ்ச்சி.
21--10--55 வெள்ளியன்று,
கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில்

மணிமகுடம்

(கதை, வசனம்: மு. கருணாநிதி.)

கட்டணம்:
ரூ. 2-8-0, 1-8-0, 0-12-0, அணா 6
பெண்கள்: தரை அணா 4.

குறிப்பு: பிரதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6-30 மணிக்கு நடைபெறும். திங்கள்தோறும் விடுமுறை.

பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...

சிறைப் பறவை!

புலியைக் கூண்டுக்குள் அடைத்து வேடிக்கைப் பார்ப்பார்கள் சில விளையாட்டு மனம் படைத்தவர்கள். அதிலே அவர்களுக்கு ஒரு பெருமையும் இருக்கலாம்; "பார்த்தாயா; புலியே என் கைக்குள்" என்று மாற்றாரை பயமுறுத்தலாமல்லவா!

கிளியைக் கூண்டில் அடைத்து மகிழ்வோர் ஒரு ரகத்தினர். "அடடா! சொன்னதையே திருப்பிச் சொல்லுதே!" என்று பல்லெல்லாம் தெரிய சிரிப்பதில் ஏதோ குதூகலம் அவர்களுக்கு!

—இவைகளில் எதுவும் புதுமையில்லை. ஆனால் புலிக்கும் கிளிக்கும் ஈடாக, பையன் ஒருவனை சிறைப் பிடித்து வைத்திருப்பதை என்னவென்று சொல்வது? அதோ, "என் வீட்டு எஜமானர் ஒரு பணக்காரராக்கும்" என்று தோற்றத்தால் சொல்லிக் கொண்டிருக்கிறதே ஒரு தோட்டம் சூழ்ந்த வீடு. அந்த வீட்டிலேதான் இப்படி ஒரு விபரீதம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

வீட்டிற்குள் நுழைந்ததும் முன் அறையில் 'வருக; வருக' என்று இரு கரம் கூப்பி வரவேற்பது போல காந்தியின் மிகப் பெரிய படம் ஒன்று—அதற்குப் புதிதாக மாட்டப்பட்ட கதர்மாலை-பக்கத்திலே இந்தியாவின் படம்-அதிலே சிறை வைத்ததைப் போல ஒரு பெண்ணின் உருவம்-அவள் பாரதத்தாயாம்! அதற்குப் பக்கத்திலே பல வர்ணச் சுவரொட்டிகள்! "உங்கள் ஓட்டு மாட்டுப் பெட்டிக்கே!......உங்கள் ஓட்டு ராமபிரம்மத்துக்கே!"—சரிதான்; தேர்தல் அபேட்சகர் போலும்! ஆனால், நாம் தேடி வந்த விபரீதம் என்ன? எங்கே?

அந்த அறையை அடுத்து பக்கத்திலே மற்றொரு அறை. அந்த அறை ஜன்னலின் இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் இரண்டு ஏங்கும் கண்கள் தெரியும்; பனிரெண்டு வயதைக்கூடத் தாண்டியிராத அந்தச் சிறுவன்தான் முன்பு குறிப்பிட்ட சிறைப் பறவை! அவன் கையிலே எப்போதும், ஏதேனும் ஒரு தமிழ்ப் புத்தகம் இருக்கும். அவன் படித்துக் கொண்டேயிருப்பான். ஆனால் அவன் ஏன் அந்த அறைக்குள் அடைக்கப்பட்டுக் கிடக்கிறான்? அவன் செய்த தவறுதான் என்ன? —இந்தக் கேள்விகளை — இதைப் போல இன்னும் வேறு பல கோணங்களில்—சிரித்தும்அழுதும், சீறியும் கெஞ்சியும் பலமுறைக் கேட்டுப் பார்த்து விட்டான் அந்த வீட்டுக் காரரை! ஆனால் அவரது முகத்திலோ சிரிப்பு அரும்பும் ஒரு கணம். மறு கணம் கோபம் மறைக்கும், அந்தச் சிரிப்பை. பாம்பாகி விடுவார்; சீறுவார்; பதில் கேட்ட சிறுவன் படபடக்கும் சொற்களைக் கேட்டுப் பதை பதைப்பான். எதிரே இருக்கும் காந்தியின் படத்தைப்பார்ப்பான். படமென்ன பதிலா சொல்லும்? உயிரோடிருந்தாலாவது அவரது குரல் நாட்டின் எங்காவது ஒரு மூலையில் ஒலித்துக் கொண்டிருக்கும், 'ஜீவஹிம்சை அதர்மம்' என்று! இப்போது அவரும், அவரது கொள்கைகளும் நான்கு சட்டங்கள்—ஒரு கண்ணாடி—இவற்றுக்குள் அடைக்கப்பட்ட பல வர்ண 'ஆர்ட்' காகிதம் தானே!

அந்தச் சிறுவன்-அழுது அழுது மாயும் அந்த அன்புத் தம்பிக்கே 'சமூகத் தொண்டர்' என்று சொல்லிக் கொள்ளும் ஒருவர் தன்னை ஏன் அடைத்து வைத்திருக்க வேண்டும்—என்பதற்குப் பதில் கிடைக்கவில்லை. நமக்கு மட்டுமா கிடைத்துவிடப் போகிறது! வேதனை கப்பிய அவன் விழிகள்—கொடியோரின் குணத்தையும் மாற்றும் சிறுமுகம்—பாவம்! இவைகளைக் காணும்போது நம் இதயம் விம்முகிறதே; அந்த வீட்டுக்காரப் பெரிய மனிதர் மட்டும் அந்த மனிதத் தன்மையிலிருந்து எப்படித் தப்பியிருக்கிறார்? எப்படி விலங்கினும் கொடியவராக இந்த விபரீதம் செய்து வருகிறார்? அதோ அவரே வந்துவிட்டார். என்ன நடக்கிறது என்பதையும் பார்ப்போமே!

புதிய கதருடை அணிந்த அவர் வீட்டிற்குள் நுழைந்தார். அவர் கையிலே மலர் மாலைகள்! அவைகளை மேஜையின் மேல் வைத்தார்.

"எங்கே போய் வந்தீர்கள் ஐயா?" என்று கேட்டான் சிறுவன்; ஜன்னல் கம்பிகளின் வழியாகத்தான்.

"அடடா, உனக்குத் தெரியாதா சுந்தரம்? இன்று ஒரு பெரிய காரியம் சாதித்து விட்டல்லவா வந்திருக்கிறேன்!"

"என்ன காரியம்?"

"கோவா விடுதலைக்காக ஒரு கூட்டம் கூட்டினேன்! என்னென்ன பேசினேன் தெரியுமா? போர்ச்சுக்கீசிய வெறியை—கலாசரின் திமிரை—அக்கு வேறாக: ஆணி வேறாக......அப்பப்பா!...... எனக்கு ஒரே களைப்பாக இருக்கிறது..."-என்று சொல்லிக் கொண்டே நாற்காலியில் உட்கார்ந்தார்.

"விடுதலை" என்ற சொல் காதில் பட்டதுதான் தாமதம்; மாற்றமடைந்தது சுந்தரத்தின் முகம். 'ஐயா! என்னை என்றைக்கு விடுதலை செய்யப் போகிறீர்கள்? ஏன் என்னை இப்படி வாட்டி வதைக்கிறீர்கள்?" என்று கேட்க ஆரம்பித்துவிட்டான்.

அவர் முகம் மறுகணம் 'குப்' பென்று சிவந்தது கோபத்தால். "சுந்தரம்! உனக்குப் பலமுறை சொல்லியாகிவிட்டது. இப்படி எல்லாம் கேட்டு என்னைத் தொல்லைப் படுத்தாதே என்று! அனாதையாக வந்தாயே பிச்சை எடுத்துக் கொண்டு, ஆறு வருடங்களுக்கு முன்பு; உன்னைக் கேட்டுக்கொண்டா என் வீட்டிற்குள் அழைத்தேன்? அல்லது யாரைக் கேட்டுக் கொண்டு உனக்கு உணவும் உடையும் அளித்து வருகிறேன்? அதைப்போல் நான் யாரையும் கேட்காமல் உன்னை ஒருநாள் விடுதலை செய்வேன்!" என்று உறுமினார். 'விருட்'டென்று எழுந்தார். கொல்லைப்புறம் நடந்தார்.

இதென்ன புதிர்? ஒரே மர்மம்! நமக்கு—அந்த சுந்தரத்திற்கு அவர் பேசியது புதிர்தான்! ஆனால் ஏதோ திட்டமிட்டு இந்தத் தீச்செயலைப் புரிந்துவரும் அந்த மனிதருக்கோ...! கொல்லைப்புறம் சென்ற அவர் தனித்து நின்று பேசுகிறார்; கேட்போம்: "என்றைக்கு விடுதலையாம்! ஹா...ஹா...ஹா...! சுந்தரம் அனாதை! ஆனால் எனக்கோ ஆயிரக் கணக்கான ரூபாய்களை அள்ளித் தரப் போகிறான். திருப்பதி உண்டியலைப் போல! என் வியாபாரத்திற்கு அவன்தான் முதல்; லாபம்; வட்டி—எல்லாமே! ஆனால் என் எண்ணம் கைகூட இன்னும் எத்தனை நாட்கள் ஆகப் போகிறதோ! அந்த உதயனூர் ஜமீன்தாரிடம் நானும் நான்கு வருடமாகத்தான் தூபம் போட்டு வருகிறேன்...ம்...இப்போது தேர்தல் செலவுகள் வேறு பூதம் மாதிரி பயமுறுத்தி நிற்கிறது...போகிறேன்; இப்போதும் அவரிடம் போய்ப் பார்க்கிறேன்!"—என்று பேசினார். அவசர அவசரமாக எங்கோ வெளியில் கிளம்பினார்.

★

ஒரு வாரம் சென்றது.

விடுதலை சரித்திரங்கள் சிலவற்றைப் படித்ததால்தானோ என்னவோ, சுந்தரத்திற்கு இப்போது விடுதலை தாகம் அதிகமாகிவிட்டது! தினம் ஒருமுறை வீட்டுக்காரரைத் தொந்தரவு செய்து, கண்ணீர் விடவும் ஆரம்பித்துவிட்டான்.

இந்நிலையில், ஒருநாள் மாலை...

புதிய கதருடைகள் அணிந்து கொண்டு வெளியில் புறப்பட்டார் அவர்.

குறுக்கிட்டுத் தடுத்தது சுந்தரத்தின் குரல்! வழக்கமான விடுதலைப் பல்லவிதான். கோபம் வந்துவிட்டது அவருக்கு. "முக்கிய வேலை ஒன்றுக்குப் புறப்படும்போது அபசகுனம் மாதிரி ஏண்டா பேசுகிறாய்?" என்று திட்டினார். கதவைத் திறந்தார். அவனை அடிக்கவும் தொடங்கினார். "இனி என்னை இப்படித் தொந்தரவு செய்தால் பட்டினி போட்டுக் கொல்வேன்" என்று உறுமினார். கை வலிக்கும் வரை அடித்தார். அந்த அனாதைச் சிறுவன் "ஐயோ" என்று கதறியதைக் கேட்கவில்லை; கதவைப் பூட்டினார்; வெளியே புறப்பட்டார்.

சற்று நேரத்திற்கெல்லாம் அழுது கொண்டிருந்த சுந்தரத்தின் காதுகளில் ஒலி பெருக்கியின் வாயிலாக அவரது குரல்விழுந்தது. அவர்தான் அந்தத் தெருவின் மூலையில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார்:

"ஆகவேதான் மதிப்புள்ள வாக்காளர்களே! உங்களுக்கு விடுதலையை—விலை மதிப்பற்ற விடுதலையை வாங்கித் தந்த ஒரு இயக்கம் எது என்று சொல்லி விட்டேன். அதன் சார்பில் நான் தேர்தலுக்கு நிற்கிறேன். எனக்கே ஓட்டளியுங்கள். நான் தேர்தலில் வென்றதும் உங்கள் துயருக்கெல்லாம் விடுதலை வழங்குகிறேன்..."

அந்த நேரத்தில் அவரது காதில் யாரோ எதுவோ மெதுவாகச் சொன்னார்கள்.

"என்ன? உதயனூர் ஜமீன்தார் எனக்குக் கார் அனுப்பியிருக்கிறாரா? இதோ, வந்துவிட்டேன்!" என்றார் ராமபிரம்மம் மகிழ்ச்சியுடன். கூட்டத்தை முடித்தார். எண்ணம் ஈடேறப் போகிறதே என்ற புளகாங்கிதத்துடன் ஜமீன்தாரின் காரில் ஏறிக் கொண்டார். கார் பறந்தது. 'உங்கள் ஓட்டு ராமபிரம்மத்துக்கே!' என்ற கூட்டத்தின் குரல் அவர் காதுகளில் அரைகுறையாக விழுந்தது.

★

இரவு ஒன்பது மணி இருக்கும். திடீர் மகிழ்ச்சியால் உடல் படபடக்க—உள்ளம் துடிதுடிக்கத் தன் வீட்டிற்குள் நுழைந்தார் ராமபிரம்மம்.

"சுந்தரம்!...சுந்தரம்! உனக்கு விடுதலை வந்துவிட்டதடா! எனக்கும் சுக வாழ்வு வந்து விட்டதடா!" என்று கத்திக் கொண்டே பூட்டியிருந்த அறைக்குப் பக்கத்தில் ஓடினார்.

அதே சமயம் ஜன்னல் வழியாக மேலே விட்டெறியப்பட்டுக்கிடந்த ஒரு காகித சுருள் அவர் கண்களில் தென்பட்டது பரக்கப் பரக்க எடுத்தார். படித்தார்.

"ஐயா, "சுதந்திரம்...சுதந்திரம்" என்று மூலை முடுக்கெல்லாம் பேசுகிறீர்களே, இந்த சுந்தரத்திற்கு மட்டும் ஏன் சுதந்திரம் இல்லை? நான் மட்டும் ஏன் அறைக்குள் வாட வேண்டும்? இனி நான் யாரிடமும் கெஞ்சப் போவதில்லை. இன்றைக்கே இப்போதே— இதோ—நானே—என்னிடமிருந்தே பெற்றுக் கொள்ளப்போகிறேன். எதைத் தெரியுமா? என் விடுதலையை!"

"ஆ" என்றலறினார் ராமபிரம்மம். அந்தக் கடைசி எழுத்துக்களை கண்களைக் கசக்கிக் கொண்டு மீண்டும் படித்தார்.

"விடுதலை"

'ஐயோ' என்று அலறிக் கொண்டு கதவைத் திறந்தார், அங்கே...அப்பப்பா! என்ன பயங்கரம்!

'ஐயோ, சுந்தரம்! என் பணமெல்லாம் போச்சேடா!' என்று கதறினார் அந்தப் பணப் பிசாசு!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

நேரு வந்துமா இந்த நிலே?

★

ஆசியாவின் ஜோதி தெருத்தெருவாக அழைத்து வரப் பட்டார்!

இந்தியாவின் மாணிக்கத்துக்கு அருகிலே நின்று ஆரம் சூட்டி—அதைப் புகைப் படமும் எடுக்கச் சொல்லி புள காங்கித மடைந்தார்கள்—காங்கிரசில் சேராமலிருந்தாலும் இந்தக் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியும்-என்பதை நினேக்க மறந்தவர்கள்!

—அப்படியிருந்தும் மாநிலத்தில் நடைபெற்றுவரும் நகர சபைத் தேர்தலிலே காங்கிரசுக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லே!

மோதிலால் மைந்தரையும்—அவர் அருகே ; அவரது பேத்தியார் இந்திரா காந்தியாரையும் வைத்து கண்காட்சி நடத்திக்கூட காங்கிரசால் அபரிமிதமான வெற்றியைக் குவிக்க முடியவில்லே!

அக்டோபர் 17-ந் தேதிய 'தினமணி' சொல்கிறது: 28 நகர சபைகளில் 15-ல் தான் காங்கிரசுக்கு மெஜாரிட்டியாம்! சந்தோஷப்பட முடியாத அளவுக்குச் சாதாரண வெற்றிதான், இது!

அந்தச் செய்தியின் அடியிலே 'தினமணி' மீசையில் மண் ஒட்டாத வகையில் சில மெருகு வேலேயும் செய்திருக்கிறது.

"சுயேச்சையாளர் ஆதரவுடன் காங்கிரசுக்கு மெஜாரிட்டி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நகர சபைகளின் பெயர் வருமாறு :

திண்டிவனம், மாயூரம், திருச்சி, ராசிபுரம், குடியாத்தம்"

—அந்த ஊர்களிலே சுயேச்சையாளரின் ஆதரவோடு மெஜாரிட்டி கிடைக்குமாம்—மகிழ்கிறது 'தினமணி'!

எப்படிக் கிடைக்கும் அவர்களது ஆதரவு?-தினமணியார் சொல்லவில்லே.

சுயேச்சையாளரை விலேக்கு வாங்குவதைத்தான் நாசுக்கான நடையிலே அப்படிச் சொல்கிறது கோயங்கா ஏடு.

அங்காடிப் பண்டம் போல் ஆளே விலேக்கு வாங்குவார்கள்; தலேயிலே பன்னிர் தெளித்து, தாடையைப் பிடித்துக் கெஞ்சி; பாதத்திலே விழுந்து தெண்டனிட்டு ஆள் பிடிப்பார்களாம்—அதற்குப் பெயர்தான் 'சுயேச்சைகளின் ஆதரவாம்'!

வெட்கம்! வெட்கம்! நேருவை அழைத்து வந்த போதும் இந்த நேர்மை கெட்ட செயலே நம்பி வாழ வேண்டிய நிலேமை காங்கிரசுக்கு ஏற்பட்டிருப்பது நேருவுக்கே அவமானம் !

திராவிடர் இயக்கம் பற்றி...

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

முடிந்தால் இந்தியா ஒன்றுதான என்பதை வலியுறுத்தட்டும்.

பகுத்தறிவுக்கும், நாகரிகத்துக்கும ஒத்துவரும் அந்த முறைகளேயெல்லாம் கடைப்பிடிக்காமல் கற்கண்டு நிகர் எங்கள் கொள்கைமீது காரி உமிழ்வதைப் போல வார்த்தைகளேக் கொட்டுவது கண்மூடிச்செயல்; கடைந்தெடுத்த பிற்போக்குத் தன்மை!

— இதை வடநாட்டுக்காரர் ஒருவரே உரைக்கிருர். இங்குள்ளோர் அதை உணர்ந்து பார்க்கட்டும்! ★

பிறைவானம்...

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

வாசலில் கார் சப்தம் கேட்டது. வாசலுக்கு ஓடிவந்தார் அவர். ஜமீன்தார்தான் இறங்கிவந்தார். "பிரம்மம்! நானே வந்துட்டேம்பா! என்னுலேயே தாங்க முடியவில்லே. பிள்ளே இல்லாத வாழ்வு ஒரு வாழ்வா? இத்தனே சொத்தும் எனக்கு அப்புறம் என்ன ஆகிறது? அதனுலே நீ சொன்ன பையனேயே 'ஸ்வீகாரம்' எடுத்துக்கிறதா முடிவு பண்ணிட்டேன். அதான் உன்னிடமும் சொல்லிவிட்டேனு? ...உனக்குத் திருப்திதானே! நீயும் எத்தனே வருஷமா நடையா நடந்தே! நீ கேட்டபடியே ரூபாய் 25,000 ரொக்கமா கொண்டு வந்துட்டேன். எங்கே, பையனேக் காட்டு!" என்ருர் வயதான ஜமீன்தார் மூச்சுவிடாமல்!

ராமபிரம்மம் பேசாமல் உள்ளே நடந்தார். ஜமீன்தாரும் சென்ருர். "இதோ, பையன்!" என்று அறைக்குள் காட்டினுர் ராமபிரம்மம். அங்கே... நேற்றுவரை படுக்கையாகப் பயன்பட்டுவந்த சமுக்காளம், கயிருகக் கிழிக்கப்பட்டு, அதன் ஒரு முனே வீட்டு உத்திரத்திலும், மற்ருெரு முனே கழுத்திலுமாகக் காட்சியளிக்கத் தொங்கிக்கொண்டிருந்தான் ஜமீன்தாரின் சொத்துக்கு சுவீகாரமாக வேண்டிய—சூதுக்கார ராமபிரம்மத்துக்கு 25,000 ரூபாய்கள் சம்பாதித்துத் தரவேண்டிய—செல்வன் சுந்தரம்!

ஜமீன்தார் கொண்டுவந்த பணத்தோடு திரும்பி ஓடினுர். கார் புறப்பட்டுச் செல்லும் சப்தம் எழும்பியது. ராமபிரம்மம் சிலேயாக நின்ருர்.

"உங்கள் ஓட்டு, மாட்டுச் சின்ன ராமபிரம்மத்துக்கே!"—என்று தெரு முனேயில் எட்டணு கூலிக்காரர்கள் உரத்தக் கத்திக் கொண்டு சென்ருர்கள்!

—சொர்ணம்

'தம்பி'

மூன்ருமாண்டு துவக்க இதழ் பல புதிய சிறந்த பகுதிகளுடன், 25-10-55 அன்று எங்கும் கிடைக்கும்.

நிர்வாகி,
'தம்பி' அலுவலகம்,
சிதம்பரம்.

கொள்கை வளருது கோபுரம் போலே!

நாகர்கோவில்

21—10—55 வெள்ளி மாலே 5—மணிக்கு. ஒழுகினசேரி அசோகா தியேட்டரில், அறிஞர் அண்ணு அவர்கள் மாநில மாநாட்டு நிதிக்காக சிறப்புச் சொற்பொழி வாற்றுவார்கள். அப்போது மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும். (கட்டணம்: ரு 1. அணு 8.)

சென்னே (43-வது வட்டம்)

23—10—55 ஞாயிறு மாலே 6—மணிக்கு, மீர்சாகிப் பேட்டை, ராமராவ் தோட்டத்தில், தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் தலேமையில், தோழர்கள் ஈ வெ. கி. சம்பத், வி. முனுசாமி–ஆகியோர் பேசுவர்.

செம்பியம் (சென்னே)

23—10—55 ஞாயிறு மாலே 6 மணிக்கு, பெரம்பூர் குருசாமி கிராமணியார் தோட்டத்தில் [வீனஸ் டாக்கீஸ் அருகில்] சென்னே மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அவர்கள் தலேமையில், தோழர்கள் நாஞ்சில் கி. மனேகரன், சொர்ணம் ஆகியோர் பேசுவர்.

திருவனந்தபுரம்

23—10—55 ஞாயிறு மாலே 5 மணிக்கு, ஆண்டாள் நிலேயத்தில் திராவிட மாணவ முன்னேற்றக் கழக முதல் ஆண்டு விழா 'கேரள கௌமதி' ஆசிரியர் வேணுட்டு கருணுகரன் அவர்கள் தலேமையில் நடைபெறும். தோழர் எம்.எஸ்.மணி அவர்கள் பேசுவார்.

உதகை

23—10—55 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு போஸ் மைதானத்தில் தோழர்கள் சி. பி. சிற்றரசு பி. எல். சாமிநாதன் ஆகியோர் பேசுவர்.

வேண்டுகோள்

அன்டையீர், வணக்கம்.

சிறந்த சமூக ஊழியரும், ஏழைகள் நண்பருமாய் இருந்து மருத்துவப் பணிகள் புரிந்துவந்த திரு. சரவணசாமி அவர்கள், வடபாதி மங்கலத்தில் 12—10—55 அன்று புதன்கிழமை பகல் 2 மணிக்கு இயற்கை எய்திஞர்கள். அன்னருக்குத் தகுந்த முறையில் நினேவுச் சின்னம் ஒன்று ஏற்படுத்த முடிவு செய்திருக்கிருேம். அந்த நற்பணிக்கு அன்பர்கள் யாவரும் தங்களால் இயன்ற நிதி உதவி ஆதரவு தருமாறு வேண்டிக்கொள்கிருேம்.

இங்ஙனம்,
கோ. தெட்சணுமூர்த்தி,
வடக்கு வீதி,
வடபாதிமங்லம்,
மாலூர் ரோடு வழி,
தஞ்சை மாவட்டம்.

[3] தப்பிவிட்டோம் என்று நினைத்துத்தானே என்னவோ ஒரு மாணவச் சிறுவன் வீட்டிற்கு ஓடியிருக்கிருன்! ஆனால் இந்த விவேக மற்ருேர் ஆட்சியோ வீரமென்று கருதி அவன் முதுகிலே தோட்டாவைப் பாய்ச்சி மகிழ்ந்திருக்கிறது!

புல்கானின் பார்வைக்கு...

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

வாங்கிக் கொண்டு! 'இரக்கமற்ருேர் ஆட்சியை இடித்துத் தள்ள நான் சிந்தும் இரத்தம் கடைசித் துளியாக இருக்கட்டும்'-என்று கண்ணீர் விட்டுக் கதை சொல்வதுபோல் இருக்கிறது, செத்த பின்பும் அந்தச் செல்வன் எழுப்பும் பார்வை!

அதோ;மூங்கில் நிகர் தோளினளாம் முல்லைநிகர்பல்லுடையாள் தழுவியிருந்த மலைத் தோள்கள்! நாட்டிலே கொந்தளிப்பு என்ருல் விம்மிப் புடைக்கும் தோள்கள்! அவைகளைத்தான் துளைத்துச் சென்றிருக்கின்றன தூய்மையற்ருேரின் தோட்டாக்கள்! (படம்—5)

கல்லூரித் தலைவரின் அறையில்கூட கண்ணீர் வெடிகுண்டுகள் வீசப்பட்டனவாம்!

நியாயம் வழங்கச் சென்ற நீதிபதி எஸ். கே. தாஸ் கல்லூரி மதில் சுவரிலே அறுபத்தி ஆறு தோட்டாக்கள் ஊடுருவிச்சென்றிருப்பதாகச் சொல்கிருர். நல்லவேளை! அறுபத்தி ஆறு உயிர்கள் மீது பாய்ந்த குண்டுகளைத் தாங்கி தடுத்து நிறுத்தியிருக்கின்றன மதில் சுவர்கள்! அந்தச் சுவர்களுக்குள்ள உணர்ச்சிகூட கதர் உடை அணிந்தோருக்கு இல்லை!

கொலை பாதகம்!

காட்டுமிராண்டித்தனம்!

இட்லருக்கும் ஏற்படாத இரத்த வெறி!

—வார்த்தைகளே கிடைக்க வில்லை இந்த 'சோஷலிச பாணி' களின் 'வீராப்பை' வர்ணிப்பதற்கு!

பாட்னுவிலே விழுந்த பிணங்களை அப்புறப்படுத்தி விட்டுத்தான் பண்டிதர் புல்கானினுக்கு அழைப்பு அனுப்பியிருக்கிருர்!

புல்கானினுக்கு ரஷ்யநாட்டு வரலாற்றிலேயுள்ள 'இரத்த ஞாயிறு' நினைவிருக்கலாம். பாதிரியின் தலைமையிலே பசி என்று வந்தவர்களை பீரங்கிக்கு முன் நிறுத்திப் பிணமாக்கினுர்கள்.

அதன் மறுபதிப்புதான் பாட்னுவிலே ஆகஸ்ட் மத்தியில் நடைபெற்றது!

1929-ம் ஆண்டு பண்டித நேரு காங்கிரசின் தலைவராகப் பதவி ஏற்றபோதுகாந்தியடிகள் மாணவர்களின் கரங்களைப் பிடித்து மோதிலால் மைந்தரிடம் ஒப்புவித்து என்னென்ன அறிவுரைகளை வழங்கியிருக்கிருர் தெரியுமா?

[4] இரக்கமற்ருேர் ஆட்சியை இடித்துத் தள்ள நான் சிந்தும் இரத்தம் கடைசித்துளியாக இருக்கட்டும்-என்று கண்ணீர் விட்டுக் கதை சொல்வதுபோல இருக்கிறது, செத்த பின்பும் அந்தச் செல்வன் எழுப்பும் பார்வை!

"இந்த ஆண்டு இளைஞர்களின் விழிப்புக்குக் காரணமாயிருந்திருக்கிறது. சைமன் கமிஷன் பகிஷ்காரம் வெற்றியடைய அவர்கள் ஆற்றியபணி மிகப் பெரியது! ஜவகர்லால் நேரு தேர்ந்தெடுக்கப்பட்டதை அவர்கள் தங்களுடைய தொண்டுக்குக் கிடைத்த விருதாகவே நினைக்கலாம். ஆனால் இந்த வெற்றியிலேயே மாணவர்கள் லயித்திருக்கக் கூடாது. நாடு சொந்தமாகும் வரை அவர்கள் பல களங்களைத் தாண்ட வேண்டும். நீராவ்யானது பலமிக்க ஆனால் சிறிய தேக்கத்தில் அடைத்து வைக்கப்பட்டு தேவையான போது நுண்ணிய அளவில் திறந்து உபயோகித்தால்தான் அதன் சக்தி பயன்படுகிறது; பெரும் பெரும் சுமைகளையும் இழுத்துச் செல்வதாகிறது. அதைப் போலவே இந்த நாட்டு வாலிபர்களும் தங்களுடைய பழுதில்லா சக்தியைச் சேர்த்து வைத்து—கட்டுப்படுத்தி—சமயம் வரும் போது சிறிய அளவில், அளந்து பிரயோகிக்க வேண்டும். ஜவகர்லால் நேரு அத்தகையோரின் தளகர்த்தராக தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது இளைஞர்களின்பால் இந்த நாடு காட்டும் நம்பிக்கையைத்தான் தெரிவிக்கிறது. ஜவகர்லால் நேரு தன்னந்தனியாக சிறிய அளவில்தான் சாதிக்கமுடியும். இந்த நாட்டு வாலிபர்கள்தான் அவருடைய (நேருவுடைய) கரங்களாகவும், கண்களாகவும் இருக்கவேண்டும்!"

—"மகாத்மா"
பாகம் 2. பக்கம் 490.

—காந்தி அடிகள் இருபத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு நேருவின் வெற்றியிலே இறுமாந்து இந்த நாட்டு இளைஞர்கள் மார்பின்மீது சூட்டிய மலர் மாலைகள் இவை!

வாலிபர்கள்தான் நேருவின் இரு கரங்களாம்; இரு கண்களாம்!!

அந்தக் கரங்களைத்தான் பாட்னுவிலே பண்டிதர் துடிக்கத் துடிக்கத் துண்டாடியிருக்கிருர்!

கலங்கரை விளக்கமாய் விளங்கிய அந்தக் கண்களைத்தான் துப்பாக்கி ரவைகொண்டு பிடுங்கிஎடுத்திருக்கிருர்,பி. என். கல்லூரி மைதானத்திலே!

ஐந்து படங்கள் -- நேருவின் ஐந்து கருத்துடைய பஞ்சசீலக் கொள்கையைப் போல!

பண்டிதரின் பக்தர்களே! பாரத புத்ரர்களே! பாட்னுவின் மண்ணைக் கிளறி அங்கே உறைந்துகிடக்கும் மாணவ மணிகளின் இரத்தத் துளிகளை புல்கானின் பார்வைக்கு வையுங்கள்!

நாஜிகள் நாட்டிலே நுழைந்தபோது புல்கானின் நாட்டினர் பிரேதமாகி யிருக்கிருர்கள்; பகைவரின் கையிலே சிக்க மனமில்லாமல் இரத்தம் சிந்தியிருக்கிருர்கள்!

"பஞ்சசீலம்" கரு உதித்த பாரத நாட்டிலோ எதிரிகள் தட்டும் போர்முரசம் கேட்காமல்—படையும் பீரங்கியும் முற்றுகை போடாமல்—எட்டு திக்கும் கேட்கிறது துப்பாக்கி முழக்கம்! ஏமாந்தவர்களாயிருக்கும் இந்நாட்டு மக்கள் உரிமையைக் காக்க தோலை உரித்துக் கொடுக்கிருர்கள். இரத்தத்தை அபிஷேகம் செய்கிருர்கள்.

புல்கானின் அவர்களே! தெரிந்துகொள்ளும்: "இரத்த ஞாயிறு" ரஷ்யாவிலே நடந்து முடிந்துவிட்டது. ஆனால் இந்தியாவிலே 'இரத்த ஞாயிறுகள்' இப்போதுதான் நடந்துகொண்டிருக்கின்றன: முடிவடையும் காலம் இன்னும் வரவில்லை!

—மாறன் எம். ஏ.

★

[5] நாட்டிலே கொந்தளிப்பு அ... விம்மிப் புடைக்கும் தோள்கள்-அவைகளைத்தான் துளைத்துச் சென்... தூய்மையற்ருேரின் தோட்டாக்கள்

'எழுத்தாணி'

(●)கே. அருணகிரி; கோயமுத்தூர்.

(?) செத்தவர்கள் பிழைப்பதுண்டா?

உண்டு; தேர்தல் நேரத்தில்—ஓட்டுச் சாவடியில்!

நா. ஆதி; ஓமலூர்.

(?) நேரு ஒரு சமயம் 'நான் சென்ஸ்' என்று புகன்றார். அதே நேரு சேலம் வந்தபோது, "நாம் எல்லோரும் சகோதரர்கள்" என்று கூறியுள்ளார். இது எதைக் குறிக்கிறது?

'நான்'-என்ற அகந்தை அகன்று, 'சென்ஸ்' உதயமாகியிருக்கிறது!

முழுமதி; துறையூர்.

[?] மந்திரிகளுக்கு அழகு எது?

நம்முடைய தேசிய அரசைப் பொறுத்தவரையில் மந்திரிகளுக்கு அழகு (மாதாமாதம்) வரும் பொருள் 'எண்ணுதல்!'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) கே. அருணகிரி,
ஆர். எஸ். புரம்,
கோயமுத்தூர்.

நா. ராமகிருஷ்ணன்; குளித்தலை.

(?) எத்தகைய கல்வியும், உத்யோகமும் உடையவராயிருந்தாலும் பார்ப்பனர்கள் தங்கள் ஆசார, அனுஷ்டானங்களைக் கடைப்பிடிப்பதில் சற்றும் விட்டுக் கொடுப்பதில்லையே; ஏன்?

தவறு, வரும்படி வருகிறதென்றால் அவர்கள் மிலிட்டரி ஓட்டலிலும் சர்வராக இருந்து பணிபுரிவார்கள்!

இரா. தங்கமுடி; முசலூர்.

(?) தாய்நாட்டு உணர்வு, தாய் மொழிப்பற்று இல்லாத மனிதர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

இந்த நாட்டில் அவர்களையெல்லாம் அணைத்துக் கொண்டு கட்சியொன்றே இயங்குகிறதே!

THE GOOD SMELL REMAINS CONSTANT
SRI KRISHNA
ROSE WATER
ROSE WATER—OMA WATER—VINEGAR
KADALPULIPPU—SOMBU WATER
DISTIL WATER—ROSE KULGANTH
...TUGUESE CHURCH ST. MADRAS-1

வை. வைகுண்டம்; சுந்தர பாண்டியம்.

(?) ஜவகர்லால் நேரு அடுத்த பொதுத் தேர்தலின் போது தமிழ்நாட்டில் போட்டியிட்டால் என்ன நடக்கும்?

சென்ற தேர்தலின்போது வட நாட்டு கோயங்காவுக்கு ஏற்பட்ட முடிவு உண்டாகலாம்!

கே. ம. மணிவண்ணன்; சென்னை.-1

[?] தமிழ் நாட்டில் தற்போது முதன்மையான தொழிலாக விளங்குவது எது?

இந்த நேரத்தில் காங்கிரசில் சேருவதுதான் லாபகரமான தொழில்; ஆனால் மன்னார்குடி போன்ற ஊர்களில் அது நஷ்டம் தரும் தொழிலாக நிரூபிக்கப்பட்டு சில சந்தர்ப்ப வாதிகளுக்கு பீதியையும் கிளப்பியிருக்கிறது!

ந. காந்தி; கீரனூர்.

(?) ஓய், எழுத்தாணியாரே! கம்யூனிஸ்ட் கட்சி தன்னை எதிர்த்த ஜார் மன்னனையே மண்ணாக்கியிருக்கிறது; நீங்கள் எம்மாத்திரம்?

நிறுத்தும் — நாங்கள் மனிதர்களையல்ல — இந்து மதத்திலுள்ள அத்தனைக் கடவுள்களோடும் போராடி வென்றிருக்கிறோம்! என்பதையும் நினைவிலிருத்தும்!

மு. கரிகாலன்; ராமலிங்கபுரம்.

[?] திராவிடர் இயக்கத்தால் பள்ளி மாணவர்கள் கெட்டு விட்டதாக சுப்ரமணியம் சொல்லுகிறாரே?

ஆமாம்; இப்போது கெட்டுவிட்டதாக அவர் குறிப்பிடும் வாசகம் தான் வருங்காலத்தில் அவர்களுடைய 'நற்சாட்சிப் பத்திரங்களாக' மாறப் போகின்றன!

கதிரவன்; அண்ணாமலைநகர்.

(?) தோழர் புல்கானின் வருகையால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை என்னவாகும்?

அவர் போனபிறகு கருக்சரிவாளுக்கு சாணை பிடிக்க வேண்டியிருக்கும் — அந்த அளவுக்கு நேரு அவர்களைக் காங்கிரஸ் கூடாரத்துக்குப் பக்கத்திலே அழைத்து வந்துவிடுவார்!

வீ. கேசவன்; புகலூர்.

[?] நான் ஒரு எழுத்தாளனாக ஆசைப்படுகிறேன். அதற்கு என்ன செய்யலாம்?

சொந்தத்தில் ஒரு பத்திரிகையொன்று ஆரம்பிக்கலாமே!

எம். என். பழனிச்சாமி; சிவகங்கை.

(?) எங்கும் நம்மைத் திட்டிக் கொண்டிருக்கும் சுப்ரமணியம் யார்?

அரசியலில் செத்துப்போன ஆச்சாரியாரின் 'சவம்'! காமராசர் இன்னும் 'தகனம்' செய்யாமல் விட்டுவைத்திருக்கிறார்!

கே. என். ரத்னசபாபதி; பெரம்பூர்.

(?) குருவை மிஞ்சிய சீடர் யார்?

குருபத்தினியைக் கூடிய சந்திரன்!

வேணு; சென்னை-1

(?) நேரு தனக்குச் 'சுவர்களே பிடிக்காது'-என்று பெரம்பூரில் பேசினாராமே!

ஆமாம்; சுவரில்லாமல் சித்திரம் எழுதும் வாயாடிகள் வகையைச் சேர்ந்தவர்தானே அவர்!

ரஹீம்; மூனார்.

(?) உலகத்திலேயே சிறந்தவர் யார்?

எல்லோருக்கும் உபயோகப் படுபவர்!

(?) மன்னிக்க முடியாத குற்றங்கள் எவை?

கண்டுபிடிக்க முடியாமல் செய்யப்பட்ட பிழைகள்தான்!

எம். பி. எஸ். மணி; ஏமப்பேர்.

(?) திருச்சியில் நடக்கப் போகும் தி. மு. க. மாநாட்டிற்கும் ஆவடியிலே நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்கும் என்ன வித்யாசம்?

ஆவடி மாநாட்டைப் 'பார்ப்பதற்காக' மக்கள் கூடினார்கள்! திருச்சியிலே கேட்டு, செயல் புரியக் கூடுகிறார்கள்!

ம. குருசந்திரன்; திருகோணமலை.

[?] பணம் இல்லாதவன் பிணம். குணம் இல்லாதவன்...?

பணம் உடையோன்!

அம்மையப்பன்; ...

[?] வினோபாஜியை நான் காந்திக்கு ஒப்பிடுகிறேன்; நீர் என்ன நினைக்கிறீர்?

தவறு. கோவாவிலும், பாட்னாவிலும் படுகொலைகள் நடந்த போது காந்தியார் வினோபாபா வேயைப்போல் வேடிக்கைக் கதைகள் பேசிக் கொண்டு, பொழுதைப் போக்கியிருக்க மாட்டார்!

ச. பழனிச்சாமி; முத்துச்சாமி புரம்.

[?] அரசியல் தலைவருக்கும் குடும்பத்தலைவருக்கும் உள்ள வேறுபாடு என்ன?

நல்ல அரசியல் தலைவருக்கு குடும்பத் தலைவரைவிட குழந்தைகள் அதிகம்!

"சாது"; விசுவநாதபுரம்.

[?] உடுக்கை இழந்து நிற்பவர் யார்?

அரசியல் பூசாரி ஆச்சாரியார்!

ராமு; கோடிக்கரை.

[?] ஓய், எழுத்தாணியாரே! இலக்கியம் என்றால் என்ன?

உயர்ந்த காகிதத்தில் அதிக விலைக்குத் தயாரிக்கப்படும் புத்தகங்கள்!

பெ. தமிழ்ச் செல்வன்; புதுக்கோட்டை.

[?] "நிலவு காயும் இரவுநேரத்தில் கூட கவர்னர் குடை பிடிப்பார் போலிருக்கிறதே" என்று நேரு கூற, 'அது போன்ற பழமொழி ஒன்று தமிழ் நாட்டில் இருக்கிறது' என்று நிதியமைச்சர் நவில, அந்த முதுமொழி என்ன வென்பதை தோழர் டி. டி. கே நேருவிடம் விளக்கினார் என்று தினமணியில் வந்திருக்கிறதே: அவர் கூறியது என்ன பழமொழியாயிருக்கும் எழுத்தாணியாரே?"

சே! சே! அந்த 'அற்பமான' பழமொழியை நான் சொல்ல மாட்டேன்!

மாநில மாநாடு
மாவீரர் அணிவகுப்பு
திருச்சியில்
கூடுகிறது!
செயல் வீரர்களே!
நிதி சேர்த்து
உங்கள் பங்கினைச்
செலுத்தி விட்டீர்களா?

ஆசிரியரும், அச்...டுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.